# ‘கொழும்பு துறைமுகத்தில் வேலைகள் துரிதமாக நடைபெறுகிறது’

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 314
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 9 ஷவ்வால் 14 புதன்கிழமை [24-12-69]

நத்தார்—புத்தாண்டு
ஜவுளித் தேவைகளை
பூர்த்தி செய்து கொண்டீர்களா?
உங்கள்
தெரிவுக்கான உயர்ந்தரக
ஜவுளி வகைகளும்
றெடிமேட் உடுப்புகளும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
இன்றே விஜயஞ்செய்யுங்கள்.
கணேசன் ஸ்ரோர்ஸ்
78, 63, கே. கே. எஸ். றேட்,
யாழ்ப்பாணம்.

நத்தார்-புத்தாண்டு
வைபவங்களுக்கு
உங்களுக்கும் உங்கள் குழந்தைச்
செல்வங்களுக்கும் தேவையான
சகலவிதமான
ஜவுளிவகைகளும்
றெடிமேட் உடுப்புகளும்
மலிவான விலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
விக்னேஸ்வரா
ஜவுளிமாளிகை
பஸ் நிலையத்துக்குமுன்) யாழ்ப்பாணம்.

கோட்டை, செவ்

கொழும்பு துறைமுகத்தில் ஏழு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த போதிலும் துறைமுகவேலைகள் துரிதமாக நடைபெறுவதாக அரசாங்க அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

சரக்குகள் ஏற்றி இறக்கும் வேலைகள் வழக்கத்துக்கு மேலாக 1,800 தொன் அதிகரித்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வேலைநிறுத்தத்தால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென்றும் அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

## மன்னார் பட்டினசபை கலைக்கப்படலாம்

மன்னார், புதன்

மன்னார் பட்டினசபையை ஏன் கலைக்கக் கூடாது என்பதற்கு உடனடியாகக் காரணம் காட்டுமாறு உள்ளூராட்சி அமைச்சு மன்னார் பட்டின சபைத் தலைவர் உட்பட 6 அங்கத்தவர்களிடமும் விளக்கம் கோரியுள்ளது.

நிர்வாகச் சீர்கேடு, ஊழல் ஆகியவற்றுக்கான காரணங்கள் காட்டப்பட்டு கேட்கப்பட்டுள்ள விளக்கங்களுக்கு 3 கிழமைக்குள் பதில் கொடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “வடக்கு, கிழக்கு பொதுவான இடத்தில் பல்கலைக் கழகம்”



## உயர் கல்விச் சபை குழுவுக்கு திரு. எஸ். ஜே. வி. மகஜர்

கொழும்பு, செவ்வாய்

“சிங்கள கலாசாரத்தைப் பாதுகாப்பதற்கு இங்கு நான்கு பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. தமிழ்க் கலாசாரத்தைப் பாதுகாப்பதற்கு இங்கு ஒரு பல்கலைக்கழகம் அவசியம். இந்தப் பல்கலைக்கழகம் தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டுக்கும் பொதுவான பொருத்தமான ஓர் இடத்தில் அமையவேண்டும்.”

இவ்வாறு தமிழரசுக்கட்சியின் தலைவரும் காங்கேசன்துறைப் பிரதிநிதியுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பல்கலைக்கழகம் அமைப்பது சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள தேசிய உயர் கல்விச்சபை உபகுழுவுக்கு சமர்ப்பிக்கவிருக்கும் மகஜரில் தெரிவித்துள்ளார்.

...ருக்கிறார். இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பில் தமிழ்மொழிப் போதனைப் பிரிவு படிப்படியாகக் குறை[illegible]தென்றும் அவர் கூறியி[illegible]க்கிறார்.

வடக்கில் சரியான தண்ணீர் வசதியும் [illegible] வசதியுமில்லையென்று தெரிவி[illegible]ள்ள திரு செல்வநாய...

தமது மகஜரில் தெரிவித்திருக்கிறார். பல்கலைக்கழகத்தின் சில பிரிவுகளை யாழ்ப்பாணத்திலும் மற்றும், சில பிரிவுகளை மட்டக்[illegible]ப்பிலும் தலைமைக்காரியாலயத்தை திருக்கோணமலையிலும் அமைக்கலாமென்[illegible] எந்தந்தப் பிரிவுகளை எங்கெங்கே அமைக்கலாமென்பது பற்றியும் திரு.

## “மத ஒற்றுமைக்கு யாழ்ப்பாணம் எடுத்துக்காட்டு”

### கிறிஸ்மஸ் விழாவில் மேயர் பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

‘கடவுள் நம்பிக்கையும், பக்தி மார்க்கமும், இறை வழிபாடும் உள்ளவர்கள் எந்தச் சமயமாயிருந்தாலும் ஒற்றுமைப்பட வேண்டியது அவசியமாகும். இன்று நடைபெறும் கிறிஸ்மஸ் விழா கிறிஸ்தவ மக்களது விழாவான போதும் மறுமறு சமயத்தவர்களும் இங்கு வருகை தந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்’

யாழ்ப்பாண நகர மேயர் திரு. எஸ் நாகராஜா இவ்வாறு தெரிவித்தார்.

வடபகுதிப் பொலிஸாரால் நடாத்தப்படும் கிறிஸ்மஸ் விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் ஆரம்பமானது. மேயர் திரு. எஸ். நாகராஜா இவ்விழாவை

வழிபாடும் கொண்டவர்கள் என்பதை எடுத்துக்காட்டுவதாக விருக்கின்றது. எச் சமயத்தைச் சேர்ந்தவர்களாகவிருந்தாலும் கடவுள் நம்பிக்கை உள்ள அனைவரும் ஒன்றுபடல் வேண்டியது மிக அவசியமாகும்.

கடவுள்வழிபாட்டின்பலன் என்ன, சமய வழிபாடு என்றால் என்ன என்ற மூடநம்பிக்கை வளர்க்கப்பட்டு வரும் இவ்வேளையில் ஆத்மீக வளர்ச்சியிலும் ஆன்ம ஈடேற்றத்திலும் நம்பிக்கையுள்ளவர்கள் இவ்வாறான விழாக்களை நடாத்துவது பயனளிப்பதாகும்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இந்து சமய மக்களுக்கு ‘ஈழநாடு’ பத்திரிகை மூலம் தீபாவளி விழா நடா...

## பாகுபாடு நீங்கியது

யாழ்ப்பாணம், செவ்.

சங்கானைப் பகுதியில் கடந்த 30 மாதங்களாக தொடர்ச்சியாக நடத்தி வந்தபோராட்டம் பயனளித்துள்ளதாக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர்வெளிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

சிறுபான்மை தமிழர்கள் அங்குள்ள தேநீர்க்கடைக்குள் சென்றபோது எவ்வித பாடுபாடும் காட்டப்படாமல் தேநீர் வழங்கப்பட்டதாகவும் இயக்கத்தினர் மேலும் தெரிவித்தனர்.

சங்கானையை பின்பற்றி மற்றைய இடங்களிலும் தேநீர்கடைகளை திறந்துவிட முன்வருமாறு தீண்டாமை ஒழிப்பு வெகுஜனஇயக்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கொழும்பு மாநகரசபை மேயராக வின்சன்ட் பெரேரா தெரிவாகலாம்

கொழும்பு, புதன்

கொழும்பு மாநகரசபையின் புதிய மேயராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த வின்சன் பெரேரா ஏகமனதாகத் தெரியப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக மாநகரசபை வட்டாரங்களில் நம்பகமாகப் பேசப்படுகிறது.

மேயர் பதவிக்குப் போட்டியிடவிருந்த மற்றோர் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவரான செனட்டர் திரு நீதிராசாவும் திரு. வின்சன்ட் பெரேராவுக்கு ஆதரவளிக்க முன்வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

கொழும்பு மாநகரசபையின் 47 அங்கத்தவர்களில் 32 பேர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களாவர். 32 பேரில் 21 பேர் வின்சன்ட் பெரேரா மேயராவதற்கு ஆதரவு வழங்க முன்வந்திருக்கிறார்களாம்.

புதிய மேயர் யாரென்பது பற்றி ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களின் கூட்டமொன்று இம்மதம் 27ந் திகதி ஸ்ரீகொதாவில் பிரதமர் டட்லிசேனநாயகா தலைமையில் நடைபெறும்.

## திருவூஞ்சல் நூல்

சுழிபுரம், புதன்

வழக்கம்பரை மகாமாரி அம்மன் திருவூஞ்சல் நூல் இன்று காலை வெளியிடப்படவிருக்கிறது. கொழும்புத்துறை ஆசிரியகலாசாலை அதிபர் திரு. எஸ். விசுவலிங்கம் தலைமையில் வெளியீட்டு விழா நடைபெறும்.

## பதிவுகாரருக்கு ஜே. பி. பட்டம்

கோட்டை, செவ்.

நாடு பூராவிலுமுள்ள பிறப்பு இறப்பு பதிவுகாரர் பட்டியலைச் சேகரிப்பதில் உள்நாட்டு அமைச்சு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. பதிவுகாரருக்கு சமாதானநீதவான் பதவி வழங்குவதற்கான நடவடிக்கையாகவே இது நடைபெறுகிறது.

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தகநாயக்காவின் இத்திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட விருப்பதாக உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரால் நடாத்தப்படும் கிறிஸ்மஸ் விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் ஆரம்பமானது. மேயர் திரு. எஸ். நாகராஜா இவ்விழாவை ஆரம்பிதது வைத்து மேலும் பேசியதாவது:

பல வருடங்களாக யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் மூன்று பிரதான சமயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ, சைவ முஸ்லிம் மக்கள் மிகவும் அன்னியோன்னியமாகவும், சகோதரபாசத்துடனும் வாழ்ந்து வருகின்றனர்கள் நமக்கிடையே நிலவும் இந்த ஒற்றுமை எதிர்காலத்தில் மேலும் பலமடைய வேண்டும்.

இன்றைய விழாவில் இங்கு வசிக்கும் சகல மக்களும் கலந்து கொண்டது நாம் கடவுள் நம்பிக்கையும்இறை யுள்ளவர்கள் இவ்வாறன விழாக்களை நடாத்துவது பயனளிப்பதாகும்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இந்து சமய மக்களுக்கு 'ஈழநாடு' பத்திரிகை மூலம் தீபாவளி விழா நடாத்திய வடபகுதிப் பொலிஸார், கிறிஸ்தவ மக்களுக்காக இன்று கிறிஸ்மஸ் விழா நடாத்துகின்றனர்கள் என்றும் விழாவுக்குத் தலைவரான பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்கு யாழ்ப்பாணம் மக்கள் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டார்

வண. பால அருள்பிரகாசம், வண. போல் பென்ஜமின், வண. சவரிமுத்து, வண. ஜேசுசகாயம் ஆகியோரும் உரையாற்றினர்

(கா. நி)

அமைப்பது சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள தேசிய உயர் கல்விச்சபை உபகுழுவுக்கு சமர்ப்பிக்கவிருக்கும் மகஜரில் தெரிவித்துள்ளார்.

இப்போதுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி மூலம் போதனையளிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருந்தாலும் தமிழ் கலாசாரத்தைப் பாதுகாப்பதற்கான வாய்ப்பில்லையென்றும் திரு. செல்வநாயகம் தெரிவித்தி யிருக்கிறார்.

வடக்கில் சரியான தண்ணீர் வசதியும்போதியகாணி வசதியுமில்லையென்று தெரிவித்துள்ள திரு செல்வநாயகம் வடக்கிற்கும் கிழக்கிற்கும் பொருத்தமான ஓர் இடத்தில் புதிய பல்கலைக்கழகம் அமையவேண்டுமென்று கோரியுள்ளார். இது சாத்தியமில்லாவிடில் வடக்கிலும் கிழக்கிலுமாகப் பல்கலைக்கழகப் பிரிவுகளை அமைக்கலாமென்று அவர் பிரிவுகளை மட்டக்களப்பிலும் தலைமைக்காரியாலயத்தை திருக்கோணமலையிலும் அமைக்கலாமென்றும் எந்தந்தப் பிரிவுகளை எங்கங்கே அமைக்கலாமென்பது பற்றியும் திரு. செல்வநாயகம் தெரிவித்திருக்கிறார். குழு முன் சாட்சியமளிக்கும்போது மேலும் பல விபரங்களைத் தெரிவித்திருப்பதாக அவர் தமது மகஜரில் தெரிவித்திருக்கிறார்.

மற்றைய இடங்களிலும் தேநீர்கடைகளை திறந்துவிட முன்வருமாறு தீண்டாமை ஒழிப்பு வெகுஜனஇயக்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சேர்ந்த அங்கத்தவர்களின் கூட்டமொன்று இம்மதம் 27ந் திகதி ஸ்ரீகொதாவில் பிரதமர் டட்லிசேனநாயகா தலைமையில் நடைபெறும்.

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தகநாயக்காவின் இத்திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட விருப்பதாக உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நீரில்மூழ்கிய வாலிபர் சடலம் 25 மணி நேரத்தின் பின்மிதந்தது

யாழ்ப்பாணம், புதன்

சிறிய தகப்பனுர் வீட்டில் விடுமுறையைக் கழிக்க வந்ததாகக் கூறப்படும் 24 வயது வாலிபர் ஒருவர் வளவிலுள்ள குளத்துக்குள் பிணமாக மிதந்தார் கம்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் என்ற வாலிபருக்கே இந்தப்பரிதாப கதி ஏற்பட்டது

ஆழம் தெரியாத நல்லூர் செட்டி தோட்ட ஐமுனுரி குளத்துக்குள் குளிக்கும் போது இவர் மரணமானுர் நேற்று முன்தினம் காலை குளிக்கும்போது திடீரெனக் காணுமல் போன இவரது சடலம் நேற்றுக்காலை 9 மணியளவில்மிதக்கக்காணப்பட்டது

நேற்று முன்தினம் பத்துக்கு மேற்பட்டவர்கள் சுழியோடிப் பார்த்தும் சடலம் அகப்படவில்லை. மரணமான வாலிபர் துறைமுகத்தில் மூட்டை இறக்கும் பகுதியில் வேலைசெய்பவர் என்றும் விடுமுறையைக் கழிக்க நல்லூர் செட்டி தோட்டத்திற் கடமையாற்றும் தனது சிறிய தகப்பனரிடம் வந்தபோதே இவ்வாறு குளத்தில் குளிக்கையில் மரணமானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

நல்லூர் கிராமசேவையாளர் திரு. ரி. சிவலிங்கமும், நல்லூர் பொலிஸ் நிலைய அதிகாரி திரு. கே. கமலநாதனும் மரணவிசாரணைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டார்கள்

மரணவிசாரணை நடைபெறுகின்றது (கா நி)

## கோண்டாவில் டிப்போ

# டயர் களவில் இருவர் அகப்பட்டனர்

யாழ்ப்பாணம், புதன்

இ.போ.ச.வுக்குச் சொந்தமான டயர்களை களவாடிச் சென்றதாகக் கூறப்படும் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கோண்டாவில் இ போ ச டிப்போவில் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்றது.

மாட்டுவண்டில் ஒன்றில் இ போ ச டிப்போவிலிருந்து இரண்டு புதியடயர்களை களவாடிக் கொண்டு செல்கையில் சந்தேக நபர்கள்மாட்டுவண்டிகளுடனும் டயர்களுடனும் அகப்பட்டனராம். கோப்பாய் பொலிஸ் சார்ஜன்ட் திரு. ராசமுத்தையா தலைமையில் சென்ற பொலிஸ் கோஸ்டியினரே இதனைக் கண்டு பிடித்தனர்

சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது (கா நி)

# "கூட்டம் கூட்டிய முறை சரியானதே"

## யாழ் வழக்கறிஞர் சங்க காரியதரிசி விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

பல்கலைக்கழகத்தை வடக்கிலா அல்லதுகிழக்கிலா நிறுவுவதென்பது பற்றி முடிவு செய்யவும், பல்கலைக்கழக கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்க ஒரு குழுவை ஒழுங்கு செய்யவும், ஒரு விசேஷ கூட்டத்தை உடனடியாக கூட்டும்படி 25 வழக்கறிஞர்கள் கையெழுத்திட்டு என்னிடம் கோரினுர்கள். அதன்படி வழக்கமான முறைப்படி கூட்டத்தைக் கூட்டினேன். வழக்கமாக கூட்டத்திற்கு அழைப்புகள் அனுப்பப்படுவதில்லை. சுற்றறிக்கைமூலம்தான் அறிவிக்கப்படும்.

யாழ்ப்பாணம் வழக்கறிஞர் சங்க காரியதரிசி திரு சங்கரப்பிள்ளை நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-வழக்கமாக வழக்கறிஞர் சங்கக் கூட்டத்திற்கு சுமார் 20 பேர்கள்தான் வருவார்கள் இக் கூட்டத்தில் முக்கியமான விஷயம்பற்றி ஆராயப்பட விருந்ததால் 32 வழக்கறிஞர்கள்சமூகமளித்திருந்தனர்.

சங்கத்தலைவர் திரு வி ஏ குலசிங்கம் வராததால் அக்கூட்டத்தை நடத்த சங்கத்தின் உபதலைவர் திரு எஸ் ஆர் கனகநாயகம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

தலைவர் கூட்டம் கூட்டப்பட்டதன் அவசியத்தை விளக்கமாக எடுத்துக் கூறினுர் இவ்விஷத்தில் ஏகமனதாக முடிவு எடுக்க வேண்டுமென திரு எஸ் சி கதிரவேலுப்பிள்ளையும், திரு. எஸ் சிறினிவாசனும் கேட்டுக்கொண்டார்கள். வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில் இருக்கும் மாங்குளத்தில் பல்கலைக்கத்தை நிறுவுவது சகலருக்கும் நல்லதெனக் கூறினுர்.

இதன்பின் திரு ஆர்.என். சிவப்பிரகாசம் வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவவேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டுவந்தார். திரு. ஏ, தனபாலசிங்கம் இதனை ஆமோதித்தார். இதைத் தொடர்ந்து வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக்கழகத்தைநிறுவவேண்டும் என்ற திருத்தப்பிரேரணையை திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை கொண்டு வந்தார். திரு. ஆர். தங்கராசா இதனை அனுமதித்தார்.

இத் திருத்தப்பிரேரணையை ஆதரித்து ஒன்பதுபேரும் எதிர்த்து 17 பேரும் வாக்களித்ததால் பிரேரணை தோல்வியுற்றது. இதன்பின்னரும் திருத்தப் பிரேரணையை கொண்டுவந்த திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையும் அதனை ஆதரித்த 9 பேரும் தொடர்ந்து கூட்டத்தில் பங்குபற்றினுர்கள்.

வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவவேண்டும் என்ற பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதனை ஆதரித்து 21 பேரும் எதிர்த்து 7 பேரும் வாக்களித்தனர். 4 பேர் நடுநிலைமை வகித்தனர். இப் பிரேரணை நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது. இதன்பின்னர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, கூட்டம் கூட்டிய முறை சரியில்லையென்றும் இந்த முடிவைதான் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் கூறினுர்.

யாழ்ப்பாண வழக்கறிஞர் சங்க உபதலைவரும் விசேட கூட்டத்திற்கு தலைமைதாங்கியவருமான திரு. எஸ். ஆர். கனகநாயகம் காரியதரிசி வெளியிட்டுள்ள அறிக்கை முற்றிலும் சரியானதென்று கூறினுர்.

திருத்தப்பிரேரணை நிறைவேறியிருந்தால் கூட்டம் கூட்டியமுறை சரியில்லையென திரு. கதிரவேலுப்பிள்ளை கூறியிருக்கமாட்டார் என்றும் அவர் கூறினுர்.

## பருத்தித்துறை

# நகைவியாபாரி கொலை வழக்கு

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறை நகைவியாபாரி கொலை வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே.விக்னராசா முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நகைக்கடையில் தொழில் பார்த்தவரானதும் பளையைச்சேர்ந்த நாராயணசாமி கந்தசாமி சாட்சியமளித்தார்.

சம்பவதினம் காலை தாம் வேலைக்குவந்த போது முதலாளி கொலையுண்டதைக் கேள்விப்பட்டதாகவும், பின்னர் நீதவானிடம் வாக்குமூலம் கொடுத்ததாகவும், ஒருவருடத்தின் பின்னர் இரகசிய பொலிசாருக்கு வாக்குமூலம் அளித்ததாகவும் கந்தசாமி தமது சாட்சியத்தின் போது கூறினுர். தாம் கடையிலிருந்து மாலையில் வீட்டுக்குப்போனபின்னர் கடையில் நடப்பவைதமக்குத்தெரியாதென்றும் அவர் கூறினுர்.

அப்துல்காதர், சப்இன்ஸ்பெக்டர் திரு. செல்லையா ஆகியோர் சாட்சியமளித்த பின் மாஜிஸ்திரேட் விசாரணையை வெருெருதிகதிக்கு ஒத்திவைத்தார்.

# தமிழ் காங்கிரஸ் வெள்ளி விழா தைமாதத்துக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் வெள்ளிவிழாவை 1970ம் ஆண்டு ஜனவரி 21, 22, 23ந் திகதிகளில் சாவகச்சேரியில் கொண்டாடுவதென நேற்று நடந்த தமிழ்க் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. 22ந் திகதி சாவகச்சேரியிலும், 23ந்திகதி யாழ்ப்பாண முற்றவெளியிலும் பொதுக்கூட்டங்களை நடத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடந்த கமிட்டிக் கூட்டத்தில் 25ம்வருடாந்தமகாநாட்டை வெள்ளிவிழாவாகக் கொண்டாடுவதென முடிவுசெய்யப்பட்டது.

இம்மாதம் 28, 29, 30ந் திகதிகளில் சாவகச்சேரியில் மகாநாட்டை நடத்துவதென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத சில காரணங்களைமுன்னிட்டுஇம் மகாநாடு அடுத்த மாதத்திற்குப் பின்போடப்பட்டு, வெள்ளி விழாவாகக்கொண்டாடமுடிவுசெய்யப்பட்டது

காங்கேசன்துறைசீமெந்து தொழிற்சாலை, பரத்தன் ரசாயன தொழிற்சாலை, வாழைச்சேனைக்கடதாசித் தொழிற்சாலைகளின் மாதிரி உருவங்களை ஊர்வலத்தில் கொண்டு செல்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மகாவலிகங்கை வடபகுதிக்கு வரும் காட்சியையும் இராமநாதன் பல்கலைக்கழகத்தின் மாதிரிப் படத்தையும் ஊர்வலத்தில் கொண்டு செல்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

# தலைமையாசிரியர் இல்லையாம்

எழுதுமட்டுவாள், செவ்.

எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச வித்தியாசாலையின் தரத்தைக்குறைத்து, அங்கிருந்த ஜி. சி. ஈ (சாதாரண) வகுப்பையும் இல்லாமல் செய்தது குறித்து மேற்படி பாடசாலை பெற்றுர் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

தலைமையாசிரியர் இன்றி இயங்கிவரும் இப்பாடசாலையில்அதிகமான பெண் ஆசிரியைகளேகடமையாற்றுவதாகவும், உடனடியாக தலைமை ஆசிரியரின் காலி இடத்தை நிரப்பும் படியும், தரத்தை உயர்த்தும்படியும்பெற்றேர் ஆசிரியர் சங்கமும், சனசமூக நிலையமும் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மூலம் ஒரு தீர்மானத்தை வடமாநில கல்வி அதிபதியிடம்சமர்ப்பித்துள்ளது.


விற்பனையாகின்றது!

1970

"ஈழநாடு"

தினக் குறிப்பு

விலை: ரூ. 1-35 சதம்

"ஈழநாடு"

Pocket Diary

விலை: -75 சதம்

ஏராளமான தகவல்கள்!
நவீன அமைப்பு!!

எமது பத்திரிகை
விற்பனையாளர்களிடம்
பெற்றுக் கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## தேவை

புதிதாகத் தொடங்கவிருக்கும் கூல்பாருக்கு 18 25 வயதிற்குட்பட்ட பெண் காசாளர் தேவை. பிணைப்பணம் ரூபா 1000. சம்பளம் 120 ரூபா. 70, பெரியகடை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் கல்வித் தராதரம், நற்சாட்சிப்பத்திரங்களுடன் பிற்பகல் 2 மணிக்கும் 4 மணிக்குமிடையில் 27-12-69ல் நேரில் சந்திக்கவும். 1618

## விற்பனைக்கு

A 40 கார் நம்பர் C. N. 4887. புதிய கடைச்சல் பட்டடைகள் (Lathes) நீளம் 6', 8', 10'. பழைய கடைச்சல் பட்டடைகள் நீளம் 4', 8'. விற்பனைக்கு உண்டு. நெல்லியடி இன்டஸ்றியல் வேக்ஸ், நெல்லியடி. 1726

## வாடகைக்கு

வீடு:

சண்டிருப்பாய் சந்திக் கருகாமையில் நான்கு விசாலமான அறைகளும் வரவேற்பறையும் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய வீடு 1-1-70 தொடக்கம் வாடகைக்கு விடப்படும். தொடர்பு கொள்க. S. ராசா, கட்டுடை. மானிப்பாய். 1725

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 24—12—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-00 திருவெம்பாவை, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம் 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்...

6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 ... 7-45

## மின்சாரம் இணைப்பதற்கான கேள்விப்பத்திர அறிவித்தல்

நீர்வேலியிலுள்ள - வலிகிழக்கு ப. நோ. கூ. ச. சமாஜக் கட்டிடத்திற்கு மின்சாரம் இணைப்பதற்கு கூலி வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் 5-1-70-ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 2-30 மணி வரை சமாஜக் கந்தோரில் சமாஜத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் சமாஜக் காரியாலயத்தில் 31-12-69 வரை ரூபா 3-00 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் வேண்டிய தகவல்களுக்கு சமாஜக் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும்.

க. வீ. கனகசபாபதி,
தலைவர்,
வலிகிழக்கு ப. நோ. கூ. சங்கங்களின் சமாஜம்,
நீர்வேலி.

22-12-69. 1892

## பஸ்ஸில் ஜேப்படி

சுழிபுரம், செவ்

இ. போ. ச. பஸ்ஸில்பிரயாணஞ் செய்து கொண்டிருந்த ஒருவரிடம் அவரது சேட்டுப் பையிலிருந்த ரூபா 150 திடீரெனக் காணாமற் போய்விட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த 782ம் இலக்க பஸ்ஸில் நேற்று மாலை இது நடைபெற்றதாம். சுழிபுரத்தைச் சேர்ந்த ஆசிரியர் எஸ். செல்லத்துரையே பணத்தைப் பறிகொடுத்தவர்.

## தில்லானா மோகனம்பாள்

புதுடில்லி, டிச. 23

தில்லானா மோகனம்பாள் படத்துக்கு ஜனாதிபதி பரிசு கிடைக்கவிருக்கின்றது.

1968ம் ஆண்டு சிறந்த படத்துக்கான தங்கப்பதக்கம் சத்தியஜித்ரேயின் வங்கப் படத்துக்குக் கிடைத்துள்ளது. வெள்ளிப்பதக்கம் மலையாளப்படம் ஒன்றுக்கு கிடைத்துள்ளது. தமிழில் சிறந்த படமாக தில்லானா மோகனம்பாள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றது.

கிளிநொச்சி

## சாம்பியன் கோஷ்டிகள்

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சியில் விளையாட்டமைச்சினால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'ஏ' பிரிவில் ஆரோகணம் விளையாட்டுக் கழகமும் 'பி' பிரிவில் விவசாயப் பாடசாலைக் கோஷ்டியும் சாம்பியன்களாக வந்துள்ளன.

ஆரோகணம் விளையாட்டுக் கழகத்துக்கும், பரந்தன் ரசாயன கூட்டுஸ்தாபன கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில் ஆரோகணம் கோஷ்டி வெற்றி பெற்றது. இடைவேளையின் போது இரு கோஷ்டிகளும் தலா 2—2 கோல்களைப் பெற்றிருந்தன.

இடைவேளையின் பின் இரு கோஷ்டிகளும் மிகவும் பலமாக மோதிக் கொண்டது, ரசிகர்களுக்கு மிகவும் ரசிப்பாக இருந்தது. ஆட்டம் முடிவடைவதற்குச் சில நிமிடங்கள் இருக்கும் போது ஆரோகணம் விளையாட்டுக் கழகம் மேலும் ஒரு கோலைப் போட்டு 3—2 கோல்களால் வெற்றி பெற்று சாம்பியனாகியது.

'பி' பிரிவில் விவசாயப் படை வீரர்களுக்கும், கிளிநொச்சி விவசாயப் பாடசாலை வீரர்களுக்குமிடையில் நடைபெற்ற சுவை மிக்க போட்டியில் விவசாயப் பாடசாலை 2—1 கோல்களால் வெற்றி பெற்று 'பி' பிரிவில் சாம்பியனாகியது.

இவ்விரு பிரிவுகளிலும் சாம்பியனைத் தெரிவு செய்யப்பட்ட கோஷ்டிகள் இரண்டும் மிகவிரைவில் கிளிநொச்சி ரெட்றிக்கோ மைதானத்தில் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கின்றன.

(தே. நி)

## சம்பள உபசபை நியமனம்

சுழிபுரம், செவ்வாய்


மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் கடமையாற்றும் சகல ஊழியர்களினதும் சம்பளத்தை நிர்மாணிக்கும் பொறுப்பு ஓர் உபசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பள நிர்மாண சபையினர் வைத்தியசாலை அங்கத்தவர்களிடம் இருந்து சம்பளத்திட்டம் சம்பந்தமாக ஆலோசனைகளைக்கோரியுள்ளனர்.

# பஸ் உதிரிப்பாகங்களை உருவாக்கும் தொழிற்சாலை

## வேலையின்மைப் பிரச்னைதீர திரு. குமாரசாமி கூறும் யோசனை

யாழ்ப்பாணம், புதன்

'வாலிபர்கள் இன்று பஸ் கண்டக்டர் வேலைபெறுவதற்கு பாடுபடுகிறார்கள். இந்தநிலைமை மாறவேண்டும். இங்கு பஸ் உதிரிப்பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவி அதில் ஆயிரக்கணக்கான வாலிபர்களுக்கு வேலைவழங்க அரசாங்கம் முன்வர வேண்டும்'



மறுவன்புலோவில் நேற்றிரவு நடந்த தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் முன்னாள் எம். பி. திரு. வி. குமாரசாமி பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இ. சட்டநாதர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. குமாரசாமி மேலும் கூறியதாவது:

வாலிபர்கள் வேலையில்லா பிரச்னையை தீர்க்காமல் வருங்காலத்தில் எந்த ஆட்சிமன்ற உறுப்பினரும் தப்பி விடமுடியாது. படித்த வாலிபர்களின் தொகை வருடா வருடம் அதிகரித்து வருகிறது. அறிஞர்கள், நிபுணர்கள் மகாநாட்டை கூட்டி, இப்பிரச்னையை தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய வேண்டும்.

சேர் பொன். இராமநாதன் காலத்தில் ஆட்சிமன்றம் செல்பவர்கள் உரிமை பற்றிய விஷயத்திலும் நாட்டின் முன்னேற்றத்திலும் தான் அக்கறை காட்டினார்கள். அதன்பின் சேர். ஏ. மகாதேவா காலத்தில் தொகுதி அபிவிருத்தியில்தான் அக்கறை காட்டினார்கள். அப்பொழுதெல்லாம் வேலையில்லா பிரச்னை விஸ்வரூபம் எடுத்திருக்கவில்லை. இன்றுள்ள நிலைமையில் வாலிபர்களின் வேலையில்லா திண்டாட்டத்தை தீர்ப்பது தான் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் முக்கிய கடமையாக இருக்கிறது.

ஆட்சிமன்ற உறுப்பினர்கள் வாலிபர்கள் வேலை பெறுவதற்கான சந்தர்ப்பத்தையும், சூழ்நிலையையும் உருவாக்க வேண்டும். கடந்த 14 வருடங்களில் தென்னிலங்கையில் பல்வேறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதிகளில் ஒரு தொழிற்சாலையாவது ஆரம்பிக்கப் படவில்லை. தொகுதிகள் தோறும் தொழிற்சாலைகள் ஆரம்பித்தால், ஆயிரக்கணக்கான படித்த வாலிபர்களுக்கு வேலை வழங்கலாம்

உப-சபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் பேசும் போது தமிழ் காங்கிரஸின் கோரிக்கையை எந்த பதவிக்குவரும் அரசாங்கமும் தட்டிக் கழிக்காது என்று கூறினார்.

திருவாளர்கள் வி. மார்க்கண்டு, எஸ். தர்மலிங்கம், ஈ. கே. இராஜகுலேந்திரன், க. கந்தசாமி ஆகியோரும் பேசினார்கள்.

# சூட்கேஸ் திருடியவர் 8 வது தடவை சிறை

...ல்வெட்டித்துறை, செவ்.

அக்கராயனைச்சேர்ந்த சின்னையா பூதப்பிள்ளை என்னும் வயோதிபர் கடந்த கந்த சஷ்டி திருவிழாவின்போது தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவிலில் வைத்து ...லுப்பிள்ளை கனகம்மா... னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்ட்ரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டார். இதற்கு முன்னர் ... தடவைகள் சிறைத் த...டனை

# யாழ்ப்பாண மாநகரசபை கேள்வி அறிவித்தல்

## சந்தைக் குத்தகைகள்—1970

1-1-1970 தொடக்கம் 31-12-1970 வரை கீழ்க்காணும் சந்தைக்கான கேள்விகள், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 28 12-69ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப்படிவங்களில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்குமுத்திரை இடப்பட்டனவாகவும் இருத்தல்வேண்டும். கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படவேண்டும் அல்லது சபையின் கேள்விப்பெட்டியில் போடுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 27-12-69ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை அதற்குரிய பணத்தைச் செலுத்தியதன்பேரில் வழங்கப்படும்.

| சந்தைகளின் பெயர்கள். | கேள்விப்பத்திரத்தின் விலை | கேள்விப்பத்திரங்களைப்பெறுவதற்காகச் செலுத்தப்பட வேண்டியபொறுப்புப் பணம். | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்குமுன் நொத்தாரிசின் உறுதிக்காகச்செலுத்தப் படவேண்டிய பணம். |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| பெரியகடை மீன் சந்தையும் மீன்சந்தையில் கடதாசி விற்பதற்கான உரிமையும். | 10-00 | 250-00 | 250-00 |

இதர விபரங்களை நேரில் வந்து அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி சுந்தரம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாணமாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 22-12-69. 1464

# தீவுப்பகுதி செய்தி

### திறப்புவிழா

வேலணை, செவ்வாய்

வேலணைக் கிராமசபை மூலம் கட்டப்படும் பொது நூல்நிலையமும், புதிய பொதுச்சந்தையும் அடுத்த மாத முதற்பகுதியில் உள்ளூராட்சி வாரம் கொண்டாடப்படும்போது திறக்கப்படவிருக்கின்றன.

0 0 0

### யாழ்ப்பாணத்தில் வேண்டும்

தமிழ்மொழி மூலம் கற்பிக்கப்படும் பூரணத்துவம் வாய்ந்த ஒரு பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவேண்டும் என வேலணை கி. ச. தலைவர் திரு. க. சதாசிவம் உயர் கல்விச்சபையைக் கோரியுள்ளார்.

0 0 0

### ஒத்திவைப்பு

தீவுப்பகுதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கிளித்தட்டு விளையாட்டுப்போட்டிகள் மழை காரணத்தால் குறித்த திகதியில் நடத்தப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

0 0 0

### வியாபாரிகள் அதிருப்தி

சலுசலா அடையாள அட்டை வினியோக முறை பற்றி வியாபாரிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். ... பெறுவதற்கு நேரில் செல்ல வேண்டியிருப்பதால் பணச் செலவும், பிரயாணக் கஷ்டமும் ஏற்படுவதாக கூறிக் கொள்ளுகிவிறனர்.

0 0 0

### மண்கும்பான் அபிவிருத்திச் சபை

மண்கும்பான் அபிவித்திச் சபையின் நிர்வாகசபைக் கூட்டம் திரு. செ. சரவணமுத்து தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மண்கும்பான் அல்லைப்பிட்டி வீதியை இணைத்து பொது மராமத்து இலாகாவுக்கு ஒப்படைக்கும்படி அல்லைப்பிட்டி ஊராட்சி மன்றத்தைக் கோருவதெனத் தீர்மானிக்கப்பட்டது. மண்கும்பான் பகுதி அபிவிருத்தி சம்பந்தமான பல விடயங்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

0 0 0

### பஸ்சேவை வேண்டும்

''மண்கும்பான், செட்டிபுலம் ஊடாக வேலணைக்குச் செல்லும் வீதியில் மக்கள் வாழ்கின்றனர். இவ்வீதிகளில் இ. போ. ச. பஸ் சேவைகளை நடாத்தவேண்டும்'' என்று கோரும் தீர்மானம் ஒன்று மண்கும்பான் அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

### 'குறைகூறுவதில் பயனில்லை

'ஆட்சிமன்றம் சென்றவர்கள் என்ன செய்தார்கள் என அவர்களைக் கேட்பதில் அர்த்தமில்லை. புதுப்பாதையில் என்ன செய்யலாம் எப்படி உரிமை பெறலாம் என்பதே எனது இன்றைய கேள்வி? யாரையும் குறை சொல்லி ஆட்சிமன்றம் செல்லவேண்டும் என்பது எனது ஆசை அல்ல' என ஊர்காவற்றுறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தீவுப்பகுதி தொகுதியில் போட்டியிடவிருக்கும் வழக்கறிஞர் ப. கதிரவேலு கூறினார்.

தீவுப்பகுதியில் செய்யப் படவேண்டிய பல குறைக்ள் பற்றி கூட்டத்தில் ஆராயப் பட்டன.

0 0 0

### ஆலோசனைக்கூட்டம்

ஊர்காவற்றுறை தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடும் திரு. ப. கதிரவேலு வழக்கறிஞரை ஆதரித்துக் கூடிய ஆலோசனைக் கூட்டத்தில் வேலணை கிராமசபை முன்னை நாள் தலைவர் திரு. ப. கந்தசாமி உரையாற்றுகையில், சிறுபான்மை மக்களுக்குப் பரிந்து பேசும் கட்சிகளும், அபேட்சகர்களும் தீவுப்பகுதித் தொகுதியில் சிறுபான்மையினத்திலுள்ள ஒருவரை போட்டியின்றி அனுப்ப முன்வருவார்களானால் தீவுப்பகுதி முன்னேற்றக்கழகத்தின் சார்பில் போட்டியிடும் திரு. ப. கதிரவேலு போட்டியில் இருந்து விலகு...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 படத்திலிருந்து.


இரவு6-15இசைப்பயிற்சி,

...மோகனும்பாள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றது.

6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 பேச்சு, 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-20 செய்தித்திரட்டு, 9-45 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜை
நடித்த
# குலவிளக்கு

3வது வெற்றி வாரம்
## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே.ஆர்.விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
# திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

...தவர்களிடம் இருந்து சம்பளத்திட்டம் சம்பந்தமாக ஆலோசனைகளைக்கோரியுள்ளனர்.

வல்வெட்டித்துறை
## றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிபோயா 3 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
நடித்த
களத்தூர் கண்ணம்மா

## ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 3 காட்சிகள்
எம் ஜி ஆர் - ஜெயலலிதா
நடித்த
இரகசியப் பொலிஸ்-115

## வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,9-30
பிரிபோயா,போயா 2-30மணி
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
நடித்த
படகோட்டி
(ஈஸ்மென்கலர்)

## ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
கிருஷ்ண - கே. ஆர். விஜயா
வாணிஸ்ரீ
நடித்த
மாஸ்டர் மதருஸ்

## வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நடித்த
மகாதேவி
(புதிய கொப்பி)

## MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Poya Prepoya 4 Shows
Horst Buchlz
in
JOHNY BANCO
(Color)

## REGAL JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Sidney James,
Joan Sims
in
DON'T LOSE YOUR HEAD

அக்கராயனைச்சேர்ந்த சின்னையா பூதப்பிள்ளை என்னும் வயோதிபர் கடந்த கந்த சஷ்டி திருவிழாவின்போது தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவிலில் வைத்து ...லுப்பிள்ளை கனகம்மா என்பவருடைய சூட்கேசைக் களவாடியதாகவல்வெட்டித் துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு.கே.விக்...ரனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்டிரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டார். இதற்கு முன்னர் ... தடவைகள் சிறைத் த...டனை விதிக்கப்பட்டதை எதிரிஒப்புக்கொண்டார். மாஜிஸ்டிரேட் எதிரிக்கு 9மாதசிறைத் தண்டனையும் இருவருட பொலிஸ் கண்காணிப்பும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

எதிரி தாம் செல்வச்சந்நிதியில்களவாடிய சூட்கேசை அச்சுவேலியில்தெருவோரத்தில் வைத்து உடைத்துக் கொண்டிருக்கையில்அவ்வழியால் வந்துகொண்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் திரு. கே.சதாசிவத்தினல் கைது செய்யப்பட்டு வல்வெட்டித் துறைப்பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்.

## தபால் தந்தி இலாகாவில் கிறிஸ்மஸ் விழா

யாழ்ப்பாணம்,புதன்

யாழ்ப்பாணம் தபால் தந்தி இலாகாவில் நேற்று முன்தினம் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது ஆசனக்கோவில் கட்டனைக் குரவர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் ஆசனக் கோவில் சிறுவர்களினதும் திருக்குடும்ப சனசமூக நிலயத்தினரதும் 'கரோல்ட்'கீதம் இடம் பெற்றது. ஆசனக்கோவில் சிறுவர்களால் யேசுநாதருடைய பிறப்பு நாடகம் நடித்துக் காண்பிக்கப் பட்டது.

## இடமாற்றம்

பருத்தித்துறை,செவ்.

நெல்லியடிப் பட்டினசபை ஆயுள்வேத வைத்தியராகக் கடமையாற்றி வரும் திரு. எஸ். சந்திரசேகரம் குச்சவெளி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பெற்றூர் ஆசிரியர் சங்கம்

அளவெட்டி, செவ்

அளவெட்டிவடக்கு சீனன் கலட்டி ஞானோதய வித்தியாசாலை பெற்றூர் ஆசிரியர் சங்க ஆரம்ப கூட்டமொன்று பாடசாலை மண்டபத்தில் தலைமையாசிரியர் திரு ச சின்னத்துரை தலைமையில் நடைபெற்றது.

உத்தியோகத்தர் தேர்தலில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு எஸ் ஜே வி செல்வநாயகம் எம் பி, உபபோஷகர்கள்: திரு க சோமசுந்தரம் (கல்வியதிகாரி), திரு வை இராஜதுங்கம், தலைவர் திரு சி சின்னத்துரை, உபதலைவர்: இ வேலுப்பிள்ளை, காரியதரிசி: இ செந்திவேல், உபகாரியதரிசி: ச சுப்பிரமணியம், தனதிகாரி த சிவலிங்கம்.

பன்னிருவரைக் கொண்ட நிர்வாகக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது,

## கிறிஸ்மஸ் விழா இன்றையநிகழ்ச்சி

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதிப் பொலிஸாரின் நத்தார் தின விழாவின் கடைசிநாள் நிகழ்ச்சிகள் இன்றிரவு யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் நடைபெறும்.

இன்றிரவு 7 நத்தார் படக் காட்சிகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் காட்டப்படும்.

படக்காட்சிகள் விபரம் வருமாறு:- செஞ்சிலுவைச் சங்கம் (தமிழ்), அமைதிப புரட்சி (தமிழ்), விசுவாசக் குடும்பம் (ஆங்கிலம்), தேவயாத்திரை (ஆங்கிலம்), ஆனியில் ஒரு நாள் (ஆங்கிலம்), ஒக்ரபஸ் வேட்டை (ஆங்கிலம்), ஞானஒளி( ஆங்கிலம்)

## பாலம் அமைக்க இணக்கம்

எழுதுமட்டுவாள்,செவ்.

மறவன்புலோ மேற்கு பயிர்ச் செய்கைக் குழுவினரின் வேண்டுகோளுக்கிணங்க கலையாபரணன் கோட்டை வீதி எருக்கலம் குளத்தடியில் பெரியதொருபாலத்தை அமைப்பதற்கு விவசாயப் பகுதி சம்மதம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை கமத்தொழில் பகுதிஉத்தியோகத்தர் திரு. எஸ். மகாலிங்கம் பயிற்செய்கைக்குழுத் தலைவர் திரு எம்.கனகசபைக்குதெரிவித்துள்ளார். இப்பாலம் அமைப்பதால் பல விவசாயிகள் நன்மையடைவர் எனக் கருதப்படுகிறது அடுத்த ஜனவரியில் இதற்கான வேலை ஆரம்பமாகும்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

0 0 0

## வியாபாரிகள் அதிருப்தி

சலுசலா அடையாள அட்டை வினியோக முறை பற்றி வியாபாரிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இப்பொழுது வினியோகிக்கப்படும் சலுசலா அடையாள அட்டையை அவ்வப் பகுதி சலுசலா கிளைகள் மூலம் வினியோகிக்க இயலாமல் தலைமை அலுவலகத்தில் வைத்து வினியோகிப்பதால் அடையாள அட்டை

...களில் இ. போ. ச. பஸ் சேவைகளை நடாத்தவேண்டும்" என்று கோரும் தீர்மானம் ஒன்று மண்கும்பான் அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

குடிமக்கள் இல்லாத தரவை ஊடாக பண்ணை ரோட்டு வழியாக அராலிச் சந்தி வரை செல்லும் பஸ் ஏன் குடிமனை உள்ள வீதியில் சேவைக்கு விடக் கூடாது என அபிவிருத்திச் சபை இ. போ. ச. மேலதிகாரிகளிடம் கேட்டுள்ளது.

...மையினத்திலுள்ள ஒருவரை போட்டியின்றி அனுப்ப முன்வருவார்களானல் தீவுப் பகுதி முன்னேற்றக்கழகத்தின் சார்பில் போட்டியிடும் திரு. ப கதிரவேலு போட்டியில் இருந்து விலகுவார், எந்த ஒரு கட்சியோ அபேட்சகரோ இதை முன் கூறவில்லை என்றும் கூறினர் இக்கூற்றை திரு. ப கதிரவேலு ஏற்று பூரண சம்மதம் தெரிவித்தார்

30 பேர் கொண்ட தேர்தல் குழுவும் நியமிக்கப்பட்டது



ஹேஸ்ப்ரே
300 பீ.டி. ஒரேயடியாக 3 கலன்கள் தெளிக்கிறது

300 பீ. டி. துருபிடித்து அழியாத பித்தளை கொள்கலன் கொண்டது. அகன்று பரவலா... கத்தெளிக்க ஏதுவாக ஒரே ஈட்... டியில் இரு பீச்சு முனைகள்; அமுக்... குப் பொத்தானும், வசதிக்... கேற்ப இயக்குவதற்கு இடது அல்லது வலது கைப் பக்க வளைவு இயக்க சாதனமும் உடையது.

ரூபா 345-00

ஹேஸ்ப்ரே
உதிரிப்பாகங்கள்
எப்போதும் கிடைக்கும்

இலங்கையில் உற்பத்தி செய்வோர்:
ஹேலீஸ் லிமிட்டட்
400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10. தொலைபேசி: 96331-6
VISION 127/69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க யோசனைகளை இஸ்ரேல் நிராகரித்தது

## அரபு நாடுகளுக்கு உதவுவதாகக் குற்றச்சாட்டு

டெல் அவிவ், டிச.23

மேற்காஸியாவில் அமைதி ஏற்படுவதற்காக அமெரிக்கா தெரிவித்தயோசனைகளை இஸ்ரேல் நிராகரித்துவிட்டது.

அமெரிக்கா தெரிவித்துள்ள யோசனைகள் இஸ்ரேலின் தற்காப்புக்குப் பாதகமானவையென்றும் இஸ்ரேலின் ஆதிபத்தியத்திற்கு விரோதமானவை என்றும் இஸ்ரேலிய அரசு கூறியுள்ளது.

மேற்காஸிய அமைதி குறித்து அமெரிக்க அரசு வெளியிட்ட யோசனைகள் பற்றி ஆராய்ந்த பின்னர் இஸ்ரேலிய மந்திரிசபை அறிக்கையொன்றை வெளியிட்டது. இந்த அறிக்கையிலேயே அமெரிக்க யோசனைகளை இஸ்ரேல் நிராகரித்துள்ளது.

அமெரிக்கா அரபுக்களுக்கு உதவிசெய்ய முனைவதாகவும் அரபுக்களைச் சாந்தப்படுத்த முனைவதாகவும் இஸ்ரேலியர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இஸ்ரேலியர் ஜோர்டானில் மேற்குப் பகுதியில் கைப்பற்றியுள்ள பகுதிகளை கைவிடவேண்டுமென்றும் ஜெருசலம் நகரம் சம்பந்தமாக நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்றும் அமெரிக்கா தனது யோசனைகளில் தெரிவித்திருந்தது.

### யுதாண்ட் நம்பிக்கை

மேற்காஸிய நெருக்கடிகளுக்கு அமைதித் தீர்வு ஒன்றை காண்பது சம்பந்தமாக வல்லரசு நாடுகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிடும் என்று தாம் நம்பிக்கையாடு இருப்பதாக ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கருத்து வெளியிட்டிருக்கிறார். பத்திரிகை நிருபர்கள் மாநாடொன்றில் பேசிய யுதாண்ட், வல்லரசு நாடுகள் எடுக்கும் தீர்மானம் ஐ நா.வின் விசேஷ பிரதிநிதி குனார் ஜாரிங் மேற்காஸிய நெருக்கடி சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். 1970-ம் ஆண்டு நம்பிக்கையூட்டும் ஆண்டாகவிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்

### ரபாத் மகாநாடு

மொராக்கோ தலைநகரான ரபாத்தில் கூடியுள்ள அரபுத் தலைவர்கள் இஸ்ரேலுக்கு எதிரான அரபுநாடுகளின் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவது சம்பந்தமாக நேற்று இரு தடவைகள் கூடி ஆலோசனைகள் நடத்தினார்கள். சவூதி அரேபிய படைகள் யேமன் எல்லையில் தாக்குதல் நடத்தியதை ஆட்சேபித்து நேற்றைய கூட்டத்தை யேமன் பிரதிநிதிகள் கோஷ்டியின் தலைவர் பகிஷ்காரம் செய்தார்.

சூயஸ் கால்வாயின் குறுக்கே நேற்று இஸ்ரேலியர் ஊடுருவிச் சென்று எகிப்திய கடற்படைத்தளமொன்றை நிர்மூலமாக்கியதாக அறிவித்துள்ளனர்.

இந்தத்தாக்குதலில் ஈடுபட்ட எதிரிகளில் சுமார் 50 பேரைக் கொன்றொழித்ததாக அரபுக்குடியரசு அதிகாரிகள் தெரிவித்தனர்

ஜோர்டான் நிலைகள் மீது இஸ்ரேலியர் தாக்குதல் நடத்தியதாகப் புகார் கூறப்பட்டுள்ளது.

## 125 பேர் பலியாகினர்

சைகோன், டிச. 23

சைகோனுக்குச் சுமார் 320மைல் தள்ளி விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதில் சுமார் 125 பேர் கொல்லப்பட்டனர். 26 பேர் காயமடைந்தனர்.

தென் வியட்னாமில் ஏற்பட்ட விமான விபத்துக்களில் இதுவே மிக மோசமானது என்று கூறப்படுகிறது.

## பச்சிலைப்பள்ளி செய்திகள்

(நமது நிருபர்)

### வெளிச்சம் இல்லை மீனவர் அவதி

காரைநகர் கோவளம் வெளிச்சவீடு கடந்த சில நாட்களாகப் பழுதடைந்திருப்பதினால் மீனவர்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். ஊர்காவற்றுறையிலிருந்து ஆழ்கடலுக்குச் செல்லும் மீனவர்கள் இந்த வெளிச்சத்தின் உதவியினாலேயே கரைதிரும்புவது வழக்கம். இதுவரை இது திருத்தப்படாததால் மீனவர்கள் பெரும் இன்னலுக்குள்ளாவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

0 0 0

பருத்தித்துறை - தாளையடி-ஆளியவளை வீதியில் தற்போது இ. போ. ச பஸ் சேவையில் ஈடுபட்டுள்ளது தாளையடி பஸ் பிரயாணிகள் சங்கத்தினரும், பொதுமக்களும் பருத்தித்துறை எம். பி. மூலம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக அண்மையில் கொழும்பிலிருந்து இங்கு வந்துசேர்ந்த 2 புதிய பஸ்கள் இவ்வீதியில் சேவை செய்துவருகின்றன

யன்[...]லைக்

இலங்கை

## நவீனநகரம் பற்றி பிரிட்டனில் அதிகாரிகள்

லண்டன், டிச. 23

''தற்சமயம் பிரிட்டனில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் இலங்கையைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் தென் வேல்ஸ் மாகாணத்திலுள்ள ஒரு நவீன நகரத்தின் திட்ட அமைப்பையும், அபிவிருத்தியையும் பார்வையிட்டனர்.

''நாம் இலங்கையில் இதுபோன்ற நவீன நகரத்தை நிர்மாணிக்கத் திட்டமிட்டிருப்பதால் இந்த விஜயம் எமக்கு மிக்க பயனளித்துள்ளது'' என்றுஅவர்கள் இங்கு கூறினர்.

ஸ்தல ஸ்தாபன அமைச்சின் நிரந்திரக் காரியதரிசி ஈ. ஜி குணவர்தன, ஸ்தல ஸ்தாபன அமைச்சின் கீழுள்ள நீர் விநியோகப் பிரிவு அதிபர் திரு. ஆர். வி. பெருமையினார் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பிரதம பொறியியலாளர் திரு. எஸ். லுடாவஹெட்டி ஆகியோரே இந்த அதிகாரிகளாவர். பிரிட்டிஷ் வெளிவிககார சாம்ராஜ்ய காரியாலயத்தின் விருந்தினராக பிரிட்டன்வந்திருக்கும் இவர்கள் இவ்வாரம் வேல்ஸ் மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தனர்.

வேல்ஸ் மாகாணத்தில் தங்கியிருந்தபோது கம்ரான் என்ற நவீனநகரமொன்றை சுற்றிப் பார்வையிடும் வாய்ப்புஅவர்களுக்குக்கிட்டியது 1949ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந் நகரம் இன்று நவீன நகர அமைப்பிற்கு ஒரு நல்ல உதாரணமாக சகல சமூக வசதிகளையும் கொண்டுவிளங்குகிறது.

— —

## தி. மு. க. பற்றி மீண்டும் ஆர். ஜி.

கோட்டை, செவ்.

தி. மு. கழகம் பற்றிய தீர்மானம் ஒன்றை திரு. ஆர். ஜி சேனநாயக்கா ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடைசெய்தல், திராவிட முன்னேற்றக் கழகம் என அறியப்படும் பிறநாட்டு அரசியற் கட்சியும், அதன் அமைப்புக்களும், இந்நாட்டில் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவை நடாத்திவரும் பிரசாரமும் இந்நாட்டினது இறைமைக்கும் ஒருமைத்தன்மைக்கும் பயமுறுத்தலாயிருப்ப[...]த

இலங்கையில்

# நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டு ஏற்பாடுகள்

கண்டி, செவ்வாய்

இலங்கையில் 1973ம்ஆண்டில் நடைபெறவிருக்கும் நான்காவது தமிழாராச்சி மகாநாட்டை சிறந்த முறையில் நடாத்துவதற்கான வழிவகைகள்பற்றி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடந்த கூட்டத்தில்ஆலோசனைசெய்யப்பட்டது. இம்மகாநாட்டிற்கு சுமார் 3 லட்சம்ரூபா செலவிடப்படுமென்றும் இப்பணத்தை தமிழ்பேசும்மக்களிடமிருந்து திரட்டுவதென்றும்மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

வண. பேராசிரியர் எக்ஸ். எஸ். தனிநாயகம் அடிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கோலாலம்பூர், சென்னை, நகரங்களில் நடந்த மகாநாடுகளைப்போல் இலங்கையிலும்சிறந்தமுறையில் மகாநாட்டை நடத்த வேண்டும் என்று கூறினார்.

இலங்கை பல்கலைக்கழக பேராசிரியர் ஜெயரத்தினம் வில்சன், கலாநிதி லெஸ்லி பண்டிதரத்ன, திரு. எஸ். செல்வநாயகம் கலாநிதி க. இந்திரபாலா, கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை ஆகியோர் இக்கூட்டத்திற்கு சமூகமளித்திருந்தனர்.

கோலாலம்பூர், சென்னையில் நடந்த தமிழாராய்ச்சி மகாநாடுகளின்மூலம் தமிழாராய்ச்சி துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதாக வண. பேராசிரியர் தனிநாயகம் அடிகள் குறிப்பிட்டார்.

1970ம் ஆண்டு பாரிஸ் நகரில் நடைபெறருக்கும் 3வது தமிழாராய்ச்சி மகாநாட்டில் உலக நாடுகளில் இருந்து ஏறக்குறைய 100 ஆராய்ச்சி அறிமுகர்களும், பார்வையாளர்களும் கலந்துகொள்வார்கள் என்றும் அவர் கூறினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிச்சமர்ப்பிக்கவேண்டுமென்று வண. தனிநாயகம் அடிகள் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் நடைபெறவிருக்கும் தமிழாராய்ச்சி மகாநாட்டின செலவில் ஒரு பங்கை மட்டக்களப்பு தமிழ் பேசும் மக்கள் வழங்க முன்வந்துள்ளனர்.

மட்டக்களப்பு மக்கள் சுமார் 50,000 ரூபாவரையில் திரட்ட உதவுவதாக தம்மிடம் வாக்குறுதியளித்திருப்பதாகவும் வண. தனி[...]

வாழும்தமிழ்பேசும்மக்களின் வரலாறு சம்பந்தமான ஆராய்ச்சி, புதைபொருள் கல்வெட்டு, முதலியன சம்பந்தமான புதிய விடயங்கள் குறிப்பாக ஆராயப்படுதல்.

தமிழ் பேசும் மக்களது பேச்சு வழக்கு, இசை, நாடகம், சிற்பக்கலை, சடங்கு முறைகள் சம்பந்தமான ஆராய்ச்சி, கிராமிய இலக்கியங்கள் பற்றிய ஆராய்ச்சி.

இலங்கையின் வடபகுதி கிழக்குப் பகுதி ஆகியவற்றின் பயிர்ச்செய்கை விருத்திப் பிரச்னைகள் முதலியன பற்றி ஆராய்ச்சி.

மலையகத்தில் வாழும் மக்கள் தொடர்பான ஆராய்ச்சி இலங்கையில் வாழும் பல் வேறு இன மக்களிடையே நிலவும் தொடர்புகள் முதலியன சம்பந்தமான விடயங்கள் பற்றிய ஆராய்ச்சி.

மேற்குறித்த விடயங்களுள் சில வெளியாய்வு முறையைத் தழுவி ஆராயப்படுதல் வெண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது

பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் எழுதப்பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைகளுள் தமிழாராய்ச்சித் தொடர்பான சிலவற்றை நான்காவது மாநாட்டை ஒட்டி அச்சிட்டு வெளியிடுவது பற்றி இலங்கைக்குழு ஆராயுமென்றும் தெரிவிக்கப்பட்டது

## 'ஈழத்து உழவுத் தமிழ்ச் சொற்கள் புதுமையானவை'

### சாலை இளந்திரையன் கருத்து

கோட்டை, செவ்

உழவுத் தமிழ்ச்சொல் அகராதியின் ஆசிரியரும் டில்லிப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியருமான திரு. சாலைஇளந்திரையன், 'இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட உழவுத் தமிழ்ச் சொற்களை ஆராய்ந்து அவை புதுமையானவையாகவும் கனமானவையாகவும் காணப்படுகின்றன. தமிழன் பல துறை ஆய்வுகட்கும் புதிய துறைகளின் வளர்ச்சிக்கும் இவற்றை அடக்கிய நூல் துணையாகும். தமிழகத்தைவிட ஈழத்தில் உழவுத் தமிழ்ப்பணி விரைவாக நடைபெற்றதையிட்டு பாராட்டுகிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

ஈழத்திலிருந்து அம்பாறை, மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னார், சிலாபம், வவுனியா, யாழ்ப்பணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிந்தாவூர், காரைதீவு, குருமன்வெளி, மட்டக்களப்பு, மூதூர், மன்னார், மருதங்குளம், முஸ்னீஸ்வரம், மதுரங்குளி, நெடுங்கேணி, தண்ணீரூற்று, கரவெட்டி, பருத்தித்துறை, உடுப்பிட்டி ஆகிய ஊர்களில் வழங்கும் சொற்கள் திரட்டப்பட்டுள்ளன.

பக்கீர்சாமி, எஸ் எம் ஜெபைஸ்தீன், க நவரத்தினம், நா இரத்தினராசா, வ சிவராசசிங்கம், ஆர் ஏ கனகராசா, ராஜ ஸ்ரீகாந்தன் ஆகியோர் இவற்றைத் திரட்டி உதவியுள்ளனர்.

ஈழத்து உழவுத் தமிழ்ச் சொற்களைத் திரட்டுவதில் தொகுப்பு நெறியாளராகக் கடமையாற்றிவரும் அனைத்துலகத் தமிழ் இளைஞர் பேரவையின் இலங்கைக் கிளை அமைப்புச் செயலாளர் திரு க நவசோதி இது பற்றி வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் வட மாகாணத்தைவிட கிழக்கு மாகாணம் அதிக சிரத்தை காட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்

— —

## மனநோயாளர் ஆஸ்பத்திரியில்

பண்டத்தரிப்பு, செவ்

காங்கேசன்துறை மனநோயாளர் ஆஸ்பத்திரியில் நேற்று கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது, பைலா நடனம், கும்மிப் பாட்டு வில்லிசை நிகழ்ச்சி சொற்பொழிவு குழுப் பாட்டு ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. மனநோயாளர் ஒவ்வொருவருக்[...]

# சோஷலிஸக் கொள்கைகளுக்கு தடையாக இருக்கவில்லையாம்

## சின்டிகேட் தலைவர்கள் கூறுகிறார்கள்

காந்திநகர், (ஆமதாபாத்) டிச. 23

அரசாங்கத்தின் சோஷலிஸக் கொள்கைகளுக்குப் [...]யாக இருக்கவில்லை. பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியின் இப்போதைய போக்கிற்குக் கொள்கை [...]

## 30தமிழ்பெண்கள் நாட்டியமாடுவர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சிண்டிகேட் தலைவர்கள் கூறுகிருர்கள்

காந்திநகர், (ஆமதாபாத்) டிச. 23

அரசாங்கத்தின் சோஷலிஸக் கொள்கைகளுக்குப் பழைய தலைவர்கள் தடையாகவிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டுகளைச் சிண்டிகேட் தலைவர்கள் மறுத்திருக்கிருர்கள்.

ஆமதாபாத்தில் காந்தி நகரில் நடைபெற்ற நிஜலிங்கப்பா ஆதரவுக் காங்கிரஸ் கட்சி மாநாட்டைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள், நிஜலிங்கப்பா, காமராஜர், மொரார்ஜி தேசாய் போன்ற பலரும் பேசினர்கள்.

சாத்தியமான ஒத்துழைப்பு யாவும் அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டது. சோஷலிஸக் கொள்கைகளுக்குப் பழைய தலைவர்கள் தடையாக இருக்கவில்லை. பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியின் இப்போதைய கொள்கை போக்கிற்குக் வேறுபாடு எதுவும் காரணமல்ல. அவர் தாம் விரும்பியதைச் செய்வதற்குக் காங்கிரஸ் தலைவர்கள் இணங்கவேண்டுமென்று எதிர்பார்த்தார். இதுவே காரணமென்று சிண்டிகேட் தலைவர்கள் தெரிவித்தார்கள்.

காங்கிரஸ் கட்சியை முன்னர் போலவே மீண்டும் பலமுடையதாக்க வேண்டும் என்றும் கட்சி மேலும் வலுப்பெறுமென்பதில் சந்தேகமில்லையென்றும் தலைவர்கள் கூறினர்கள். கட்சியிலிருந்து விலகியவர்கள் மீண்டும் கட்சியில் சேரவேண்டும். இல்லையெனில் உரிமைகள் யாவற்றையும் இழக்கவேண்டுமென்றும் அவர்கள் வலியுறுத்தினர்கள்.

இந்தியாவின்

# "உறுதிப்பாட்டுக்கு ஆபத்தில்லை"

## — பிரதமர் இந்திரா

புதுடில்லி, டிச.23

இந்தியாவில் ஜனநாயக ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இது தவறு. சமீபகால நிகழ்ச்சிகளினால் மக்கள் ஆட்சிமுறைக்கோ அல்லது இந்தியாவின் உறுதிப்பாட்டுக்கோ ஆபத்து ஏற்படவில்லையென்று பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினர்.

ஆபிரிக்காவிலுள்ள இந்திய தூதர்களின் கூட்டமொன்று புதுடில்லியில் நடைபெற்றது. அந்தக்கூட்டத்தில்பேசுகையில் திருமதி காந்தி இந்தக் கருத்தை வெளியிட்டார்.

சமீபகால சம்பவங்கள் நாட்டின் உறுதிப்பாட்டுக்கு வழிவகுக்கும் என்று கூறிய திருமதி காந்தி, ஒவ்வொரு தேர்தலின்போதும் மக்கள் மனவளர்ச்சியடைந்துவருகிறார்கள். மக்களின் சக்தி முழுமையாக மதிக்கப்படுகிறது என்று அவர்கள் உணரும் வகையில் என்னல்முடிந்தவரையில் முயற்சிசெய்திருக்கிறேன் என்று மேலும் சொன்னர்.

### யு. எஸ்.-சோவியத் பேச்சுவார்த்தைகள்

நியூயோர்க், டிச. 23

முக்கிய போர் ஆயுதங்கள் மீது தடை விதிப்பது சம்பந்தமாக முழு அளவிலான பேச்சுவார்த்தைகளை வியன்னுவில் ஆரம்பிப்பதற்கு அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இணங்கியுள்ளன.

ஹெல்சிங்கியில் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளின் விபரங்கள் வியன்னு மகாநாட்டில் தாக்கல்செய்யப்படும். ஏப்ரல் மாதத்தில் வியன்னுவில் ஆரம்பமாகவிருக்கும் பேச்சுக்கள் பின்னர் ஹெல்சிங்கியில் தொடர்ந்து நடத்தப்படும்.

### விபத்து

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த பஸ் முல்லைத்தீவு மாங்குளம் ரோட்டில் 20-வது மைலுக்கருகாமையில் சென்று கொண்டிருந்த இரட்டை மாட்டு வண்டியுடன் மோதியதால் மாட்டுவண்டி பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளதாகவும் வண்டிச் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியதாகவும் அறியப் படுகிறது. முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணை செய்கின்றனர்.

## 30 தமிழ்ப்பெண்கள் நாட்டியமாடுவர்

சென்னை. டிச. 23

ஜப்பானில் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் உலகப் பொருட்காட்சியில் பரத நாட்டியம் ஆடுவதற்கான தமிழ் நாட்டிலிருந்து 30 பெண்கள் போகவிருக்கிருர்கள்.

'எக்ஸ்போ-70' என்று அழைக்கப்படும் இந்தப் பொருட்காட்சி அடுத்தவருடம் மார்ச் மாதம் 15-ம் திகதி முதல் செப்டம்பர் 13-ம் திகதிவரையில் (6 மாதங்கள்) ஜப்பானில் நடைபெறும். இந்தப் பொருட்காட்சி விழாவில் பரதநாட்டியம் ஆடுவதற்காக சுமார் 30 தமிழ்நாட்டுப்பெண்களை இந்திய ஜப்பான் கலாசார நிலையம் தேர்ந்தெடுத்துவருகின்றது

## கல்வித் துறையில் பிரிட்டனின் உதவி

லண்டன், டிச.23

சுதந்திரமடைந்தமுழுமையான முன்னேற்றமடையாத நாடுகளிலிருக்கும் இளம் சமூகத்தினருக்கு உயர் கல்வி வசதிகளை அளிக்கும் திட்டத்தின் கீழ் இலங்கையின்பேராதனை, கொழும்பு சர்வகலாசாலைகளில், இரசாயனம், பௌதிகம், கட்டிடக் கலைத் துறைகளில் போதிப்பதற்கென ஐந்து பிரிட்டிஷ் விரிவுரையாளர்கள் தற்சமயம் இலங்கை வந்திருக்கின்றனர். சாம்ராஜ்ய கல்விக் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் இவர்கள் தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

உயர்கல்விக்கான தேசிய கவுன்சிலில் இன்னுமொரு நிபுணர் பணிபுரிகிருர். இரு ஆங்கில மொழி நிபுணர்கள் சாம்ராஜ்ய ஆங்கில மொழியுதவித்திட்டத்தின் கீழ் தரப்பட்டு, தற்சமயம் கல்வி அமைச்சின் கீழ் வேலைசெய்கின்றனர்.

இன்று 12,000க்கும் மேற்பட்ட பிரிட்டிஷ் பெண்களும், ஆண்களும் முன்னேறும் நாடுகளின் சர்வகலாசாலைகளில் பணி புரிகின்றனர். இதைவிட பிரிட்டனின் வெளிநாட்டு அபிவிருத்திக்கான அமைச்சு ஒவ்வொரு வருடமும், வெளிநாட்டுச் சர்வகலாசாலைகளில் பணியாற்ற முன்வரும் நிபுணர்களுக்கென 500,000 பவுண்கள் வரை செலவழிக்கிறது.

முயற்சியின் பயனுக அண்மையில் கொழும்பிலிருந்து இங்கு வந்துசேர்ந்த 2 புதிய பஸ்கள் இவ்வீதியில் சேவை செய்துவருகின்றன.

### யன்னலைக் காணவில்லையாம்

தாளையடியில் கட்டி முடிவடையும் தறுவாயிலிருக்கும் கிராம முன்னேற்றச் சங்கக்கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த யன்னல் கம்பிகளை விஷமிகள் யாரோ கழற்றியதுடன் யன்னலையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். இதுபற்றி பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரிக்கும் பளைப் பொலிசுக்கும் நிர்வாகிகள் புகார் செய்துள்ளனர்.

### நேர்முகப் பரீட்சை

நீர்கொழும்பு கடற்றெழிற் பயிற்சி நிலையத்தில் தமிழ் மொழி மூலம் கடற்றெழில் பயிற்சி அளிப்பதற்குபரீட்சார்த்திகளைத்தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் தைமாதம் 2-ம் திகதி கொழும்பு மீன்பிடி இலாகா தலைமை நிலையத்தில் நடைபெறவிருக்கிறது.

### வைத்தியசாலை

புலோப்பளைக் கிராமசபை எண்ணுயிரம் ரூபா செலவில் ஒரு புதிய ஆயுள்வேத வைத்தியசாலையை நிர்மாணிக்கவிருக்கிறது.

### மயிலிட்டி கி. ச. புதிய தலைவர்

மயிலிட்டி கிராமசபையின் புதிய தலைவராக திரு. கு. த. இராசதுரை தெரிவு செய்யப்பட்டுள்ளார். முன்னுள் தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி அரசாங்க உத்தியோகம் காரணமாக பதவியை இராஜிஞமா செய்ததைத் தொடர்ந்து இத்தேர்தல் நடைபெற்றது.

### மைதானம் இல்லை போட்டி பின்போடப்பட்டது

பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி பிரிவுக்குள் மழை காலத்தில் உதைபந்தாட்டப் போட்டி நடாத்துவதற்கு நல்ல விளையாட்டு மைதானம் இல்லாமையால் அண்மையில் நடைபெறவிருந்த பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி பிரிவுக்குட்பட்ட விளையாட்டுச்சங்கங்களுக்கிடையில் நடைபெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள், விளையாட்டுக்கழகங்கள் ஆகியனவற்றிற்குச் சொந்தமான விளையாட்டு மைதானங்களும் மழை நீர் தேங்கி குளம் போல காட்சியளிக்கின்றன.

அதன் அமைப்புக்களும், இந்நாட்டில் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவை நடாத்திவரும் பிரசாரமும் இந்நாட்டினது இறைமைக்கும் ஒருமைத்தன்மைக்கும் பயமுறுத்தலாயிருப்பதை முன்னிட்டு அவற்றைத் தடை செய்யவேண்டுமென இச்சபை கருதுகிறது என்று அந்தத் தீர்மானம் கூறுகின்றது.

## ஐ தே. கட்சியின் வெற்றிகள்

கோட்டை, செவ்வாய்.

நேற்று நடைபெற்ற பல உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி, பல மாநகரசபை, நகரசபைகளைக் கைப்பற்றியுள்ளது.

மாத்தறையில் 11 ஸ்தானங்களில் ஆறு இடங்களையும், மாத்தளையில் 13 ஸ்தானங்களில் 11 இடங்களையும், நாவலப்பிட்டியில் 5 வட்டாரங்களையும், எட்டியாந்தோட்டையில் 5 வட்டாரங்களையும், ஐ. தே. கட்சி கைப்பற்றியுள்ளது.

## பாராட்டுத் தீர்மானம்

புங்குடுதீவு, செவ்.

நடுத்துருத்தி குறிகாட்டுவான் சனசமூக நிலைய நிர்வாகசபை அதன் தலைவர் திரு. இ. பரநிருபசிங்கம் தலைமையில் கூடி இம்மாதம் 3-ம் திகதி நெடுந்தீவிலிருந்து குறிக்காட்டுவான் நோக்கி வந்துகொண்டிருந்த லோஞ்சிலிருந்து கடலில் தவறிவிழுந்த பிரயாணி ஒருவரை மரணத்தினின்றும் காப்பாற்றிய லோஞ்சு சிப்பந்தியான கதிரவேலு என்றழைக்கப்படும் ஐயாத்துரையின் துணிச்சல்மிக்க உதவியைப் பாராட்டி ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

நடுத்துருத்தியில் மீண்டும் தபால் பெட்டியை வைக்கும்படி அல்லது நடுத்துருத்திச் சந்தியில் ஒரு தபால் பெட்டி அமைத்துத் தரும்படி தபால் பகுதியைச் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

## கட்டாக்காலிகள் தொல்லை

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவில் கட்டாக்காலி மாடுகள் தொல்லை அதிகரித்துள்ளது.

தினமும் இரவில் காரியாதிகாரி அலுவலக விருந்தைகள் மற்றும் சில இடங்களில் மாடுகள் தங்கி அவற்றை அசுத்தப்படுகின்றன.

பேசும் மக்கள் வழங்க முன்வந்துள்ளனர்.

மட்டக்களப்பு மக்கள் சுமார் 50,000 ரூபாவரையில் திரட்ட உதவுவதாக தம்மிடம் வாக்குறுதியளித்திருப்பதாகவும் வண. தனிநாயக அடிகள் தெரிவித்தார். இலங்கையின் மற்றப் பகுதிகளில் வாழும்மக்களும் நிச்சயமாக பொருளுதவி வழங்குவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இம்மகாநாட்டில் இலங்கை சம்பந்தமான விடயங்கள் சிறப்பாக ஆராயப்பட வேண்டும் என்றுகருத்து தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயங்களுக்குள் சில பின் வருமாறு. இலங்கையில்

## திருவாதிரை விழா

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி சோமசுந்தரேஸ்வர கோவிலில் இன்று மார்கழி திருவெம்பாவை ஒன்பதாம்நாள் 'ஆருத்தரா' அபிசேகமும் அம்பாள், மாணிக்கவாசகசுவாமிகள் சகிதம் திருஉலாவரும் நிகழ்ச்சியும் இடம்பெறும்.

0 0 0

சுன்னுகம், புதன்

கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் கோவிலில் கடந்த சிலநாட்களாகநடைபெற்றுவரும் திருவாதிவூரடிகள் பூராணப்பூர்த்திவிழா இன்று நடைபெறுகிறது. ஆருத்தராதரிசனம் இன்று அதிகாலை நடாத்தப்படும். திருவெம்பாவையை முன்னிட்டு இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## ஒரு பிரச்னை

பருத்தித்துறை, செவ்.

பாடசாலையை விட்டு நீங்கிய ஒரு மாணவனுக்கு அப்பாடசாலை அதிபர் க.பொ.த (சாதாரண) பரீட்சை எடுப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கலாமா என்ற பிரச்னை இப்பகுதியிலுள்ள ஒரு பாடசாலையில் தோன்றியுள்ளது. மேற்படி பாடசாலையிற்படித்துக் கொண்டிருந்த போது மாணவன் இப்பரீட்சைக்குத்தோற்றுவதற்காகப்பாடசாலை மூலம் மனுப்பண்ணியிருந்தாராம். அனுமதிச்சீட்டுகள் பரீட்சைப் பகுதியினரால் வழங்கப்படுமுன் இவர் அப்பாடசாலையை விட்டு விலகிவிட்டாராம். எனவே இப்பாடசாலை அதிபர் மேற்படி மாணவனுக்கு அனுமதிப்பத்திரம் வழங்க மறுத்துவிட்டார். இப்பிரச்னைகல்விப்பகுதிக்கும், பரீட்சைப்பகுதிக்கும் பெருந் தலையிடியை ஏற்படுத்யுள்ளதாகத்தெரிகிறது.

ஞர், மருதங்குளம், முஸ்னீஸ்வரம், மதுரங்குளி, நெடுங்கேணி, தண்ணீரூற்று, கரவெட்டி, பருத்தித்துறை, உடுப்பிட்டி ஆகிய ஊர்களில் வழங்கும் சொற்கள் திரட்டப்பட்டுள்ளன.

திருவாளர்கள் ஏ எல் எம் அமீம், வெ ஜெயநாதன், அருள் செல்வநாயகம், எப் எக்ஸ் ஸி நடராசா, ஏ எஸ் இப்ருகீம்,

கொண்டாடப்பட்டது, பைலா நடனம், கும்மிப் பாட்டு வில்லிசை நிகழ்ச்சி சொற்பொழிவு குழுப் பாட்டு ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. மனநோயாளர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பரிசுகளும் வழங்கப்பட்டன. தேனீர் உபசரணையும்இடம் பெற்றது.

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 9-ம் திகதி [24-12-69]

## சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- மெச்சத்தகுந்த நடவடிக்கையின் மூலம் உங்களைத் துச்சமாக மதித்தவர்களைக்கூட அடிபணிய வைப்பீர்கள். பொருள் வளத்தில் புதுப்பொலிவு காணப்படும் சிலருக்கு பிறந்தகத்தின் எண்ணம் தலைதூக்கலாம்.

**ரிஷபம்**- சிறிய காரியத்தை முடிப்பதற்கும் அதிக பணத்தைச் செலவு செய்வீர்கள். ஆடம்பரப் போக்கினல் கடன்படவும் நேரிடலாம் உறங்கிக்கிடந்த பகை மீண்டும் தலைதூக்க ஆரம்பிக்கும். அவதானம் வேண்டும்.

**மிதுனம்**- துஷ்டர்கள் உறவால் துயரத்தில் மூழ்குவீர்கள். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமேற்படும். கணவன் மனைவி உறவு காரசாரமாக இருக்கும். எக்காரணத்தைக்கொண்டும் திடீர் முடிவுக்கு வர வேண்டாம்.

**கடகம்**- எழுத்தாளருக்கு இன்று எழுச்சிமிக்க தினம். புதிய படைப்புகளுக்கான கருவூலம் கிடைக்கலாம்- சிலர் வாழ்க்கையில் சன்மானம் கிடைப்பதற்கும் இடமுண்டு. குடும்ப வாழ்க்கையிலும் சுமுகமான சூழ்நிலைகள் உருவாகும்.

**சிம்மம்**- சிந்தனை அலைகள் சீறிப்பாயும். எதற்கெடுத்தாலும் ஆத்திரப்படுவீர்கள் மூத்த சகோதரத்தின் உடல் நிலை பாதிக்கப்படலாம். போட்டி விவகாரங்களில் இறங்காது பொறுமையுடன் இருக்கவும். துக்கதினம்.

**கன்னி**- நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகும். வாகனச்சாரதிகளுக்கு வளமான திருப்பம் ஏற்படும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றம் காணப்படுகின்றது. சிறப்பான தினம்.

**துலாம்**- சமூகத்தில் அந்தஸ்து உயர்வதற்கு இடமுண்டு. பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையைத் தேடித்தரும் மதத்தொடர்பான காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும். ஸ்தல யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

**விருச்சிகம்**- ஏமாந்த நேரத்தில் உங்களை வீழ்த்தி விடுவதற்குச் சிலர் திட்டம் போடுவார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது விரும்பத்தக்கது கூட்டணியில் பிளவுக்கு இடமுண்டு தனிமை நன்று.

**தனுசு**- கண்ணியமான காரியங்களை முடிப்பதில் வெற்றி காண்பீர்கள். சுற்றுடலில் செல்வாக்கு வளர்ச்சியடையும் காதல் சிட்டுக்களுக்கு இன்று தேன் சொட்டும் தினம். எதிர்ப்புக்கள் மறைவதற்கிடமுண்டு.

**மகரம்**- பணத்தைக்கொடுத்து பகையைச் சம்பாதித்துக்கொள்வீர்கள். தொழில்துறையிலும் சோர்வு தென்படுகின்றது நண்பர்கள்மூலம் புதிய தொல்லைகள் தோன்றக்கூடும். நிதான புத்தியுடன் நடக்கவும்

**கும்பம்**- எண்ணிய கருமங்களில் வெற்றி கிடைக்கும். நீண்டநாள் தடை இன்று விலகக்கூடும். முதியவர் ஒருவர் உம்மை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்லுவார். இனபந்துக்களின் கொண்டாட்டத்துக்கும் இடமுண்டு.

**மீனம்**- வணிகத்துறையில் வகையான சந்தர்ப்பம் கிடைக்கும், வியாபாரத்துறைமூலம் வெளிநாடுகளுடன் தொடர்பு ஏற்படும் இருப்பிடமாற்றம் ஏற்படின் சிறப்புடையதாகும். கடற்றெழிலாளர்களுக்கு திருப்திகரமானதினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னு என்னு முன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேருய் இன்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

— திருவெம்பாவை.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 9-ந் திகதி (24-12-69)


## பிரதமரின் அறிக்கை

மன்னர் சம்பவங்கள் பற்றி ஆட்சிமன்றத்தில் பிரதமர் விடுத்த அறிக்கை அங்குள்ள நிலைமையை ஓரளவு தெளிவுபடுத்தியிருக்கிறது. இராணுவ சிப்பாய்களின் இரட்டைக்கொலை சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் சிலர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாலும் அது சம்பந்தமான புலன் விசாரணைகள் இன்னும் இரண்டொரு தினங்களில் முடிந்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவிருப்பதாலும் கொலை பற்றிய அம்சத்தை இப்போது நாம் ஆராய்வது முறையல்ல.

சில தினங்களுக்கு முன்னர் மன்னர் சம்பவங்கள் பற்றி நாம் இதே பத்தியில் எழுதியபோது தாழ்வுபாடு கிராமத்தில் வன்முறைச்செயலில் இறங்க முனைந்த ஒரு கூட்டத்தினர்மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய நேர்ந்தது பற்றியும் அந்தக் கூட்டத்தினர் பொலிசாருக்கு உதவிபுரியச் சென்ற இராணுவத்தினர்' என்று இராணுவத் தளபதி கூறியதாக வெளிவந்த கருத்துப்பற்றியும் குறிப்பிட்டிருந்தோம்.

தாழ்வுபாடு கிராமத்தில் வன்முறைச் செயலில்இறங்க வந்த கும்பல்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நேர்ந்ததென்பதைப் பிரதமரின் அறிக்கை இப்போது தெளிவாக்கியிருக்கிறது. அந்தக் கும்பல் இராணுவத்தைச் சேர்ந்தவர்களென்பதை பிரதமரின் அறிக்கையும் இராணுதத்தளபதி தெரிவித்ததாக வெளிவந்த செய்தியும் உறுதிப்படுத்துகிறது.

ஒரு நாட்டின்மீது அந்நிய நாடு ஒன்று படையெடுத்தால் படையெடுப்பிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதுதான் இராணுவத்தின் முக்கிய கடமை. உள்நாட்டில்

பயிற்சியளிச்கப்பட்டார்களோ அப்படியேதான் இப்போதும் பயிற்சியளிக்கப்படுகிறது, வெளிநாடுகளிலும் நமது இராணுவ அதிகாரிகள் பயிற்சிபெற்று வருகின்றனர்.


அந்நிய ஆட்சிக்கு எதிராக மக்கள் தலைதூக்க விடக்கூடாது என்பதற்காக மக்களை எப்படியெல்லாம் அடக்கி வைக்க முடியுமோ அந்த அளவுக்கு இராணுவத்தினருக்குப் பயிற்சியளித்தனர். இன்று இலங்கை சுதந்திர நாடாக இருப்பினும் அவர்கள் பெறும் இராணுவப் பயிற்சி ஒரே மாதிரியானவைதான். மக்கள்சேனையிடம் கேட்டுப்படியுங்கள்; அவர்கள் உங்களுக்கு வழிகாட்டுவார்கள்'' நவசீனத் தலைவர் தமதுமக்களுக்கு கூறுவதாக சீனப் பிரசுரங்கள் கூறுகின்றன. இங்குள்ள இராணுவத்தினரிடம் பொதுமக்கள் அணுகமுடியுமா?

மன்னாரில் மட்டுமல்ல வடக்கின் கரையோரப்பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர் வன்முறைச்செயல்களில் ஈடுபட்டு பொது மக்களைத் தாக்கியதாக இதுவரை வெளிவந்த புகார்கள் கொஞ்சமல்ல- அரசியல் மற்றும் காரணங்களுக்காக அந்தப் புகார்கள் மேலிடத்தில் ஏறுவதில்லை மன்னாரில் இராணுவ சிப்பாய்களை வெளியே செல்லக்கூடாது என்று ஒரு தளபதி உத்தர விட்டுச் சென்றும் அது மீறப்பட்டிருக்கிறது, ஆனால் அவர்கள்மீது எதுவித நடவடிக்கையுமில்லை

சட்டவிரோதக் குடியேற்றத்தையும் கள்ளக்கடத்தலையும் தடுப்பதற்காகத்தான்இராணுவத்தினர் கரையோரப் பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளனராம். இராணுவத்தினருக்கு இது தகுந்த பொருத்தமான வேலையல்லவென்பதை கடந்தகாலச் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

## ஆர்த்ரா தரிசனம்

# ஆதிரையில்கண்டதொருஅம்பலத்தான்கூத்து



ஆதிரை நட்சத்திரம் சிவபெருமானுக்குரியது. ஓண நட்சத்திரம் திருமாலுக்குரியது. நமது கதிரவனைப் போல எத்தனையோ மடங்கு பெரியதான திருவாதிரை கொடிய உஷ்ணம் நிறைந்தது. பெரும் ஒளிப்பிழம்பு. சிவபெருமானுக்குரியதான படியால் அவருக்குகுளிர்மை பொருந்திய வில்வத்தைச் சாத்தி அவரை அர்ச்சிக்கிறோம். திருவோணம்குளிர் மிகிந்தது. எனவே அதற்குரியவரான திருமாலுக்கு சூடுத்தன்மை வாய்ந்ததுளசியைச் சாத்தி வழிபடுகிறோம்.

அண்டப் பெருவெளியில் அனந்தகோடி தாரகைகள் பவனி வருகின்றன. இவற்றையெல்லாம் கணக்கிடுவது சுலபமான காரியமல்ல. ஆகையால் பூமியிலிருந்து கூட்டமாக நெருங்கி காணப்படும் நட்சத்திரங்கள் சிலவற்றை ஒன்ருகச் சேர்த்து அச்சுவினி, பரணி முதலாம் இருபத்தேழு நட்சத்திரங்களாகப் பெயரிட்டு அழைக்கிறோம். இப்படியே அச்சுவினியில் ஆறு மீன்களும். பரணியில்மூன்றும்ஆயிலியத்தில் நான்குமாக சேர்க்கப்பட்டுள்ளன ஆனல் 'ஆதிரை ஒரு மணி' என்றபடிக்கு திருவாதிரையில் மட்டும் ஒரே ஒருபெரும் நட்சத்திரமே ஜொலிக்கிறது. இதனுல் தான் போலும், முழுமுதற் கடவுளாய் விளங்கும் சிவபெருமானுக்கு திருவாதிரை கொடுக்கப்பட்டது.

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை திருநாளுக்கு இக்காரணத்திஞல் ஒருதனிச் சிறப்பும் மகிமையும் உண்டு. திருமால் பக்தையாகிய மூடிக்கொடுத்த நாச்சியார் தமது திருப்பாவையின் தொடக்கத்தில் 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னுள்' என்று கூறும் பூரண மதி திருவாதிரையை ஒட்டிய வரும், அன்று காலையில் தில்லையில் எழுந்தருளியிருக்கும் பொன்னம்பல வாணருக்கு விசேஷ பூஜைகளும் அபிஷேகமும் நடக்கும். இதையே 'ஆர்த்ரா தரிசனம்' என்றழைப்பது. ஆதிரைக்கு வடமொழி 'ஆர்த்ரா'. ஆதியில் வெறுங்காடாயிருந்த தில்லை வனத்திலேயே இப்போதைய சிதம்பர க்ஷேத்திரம் இருக்கிறது.

'மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப்போகுது ஐயே' என்று நந்தனர் குளறியழுதது இந்த ஆர்த்தரா தரிசனத்தைக் காண வேண்டும் என்பதற்காகத்தான். ஏனென்ருல் இங்கே தான் சிதம்பரநாதர் தமது நாளாந்த நடனத்தைப்புரிந்தருளினர்.

0 0 0

இமயமலையிலுள்ள தாருகாவனத்தில் முன்னொரு காலத்தில் வசித்த முனிவர்களும் இருடிகளும் 'மந்திர சாஸ்திரங்களில் எம்மைவிட வல்லமையுள்ளவர்கள் இத்திரிபுவனங்களிலும் இல்லை' என்று கர்வமும் இறுமாப்பும் கொண்டவர்களாகி சிவபெருமானை இனிமேல் மதிப்பில்லையென மறந்திருந்தனர். அவர்களுடைய அகங்காரத்தை அடக்கவேண்டுமென்று திருவுளங்கொண்ட தில்லைநாதன் தாருகாவனத்தில் தமது திருநடனத்தைக் காட்டி முனிவர்கள், இருடிகளின் மயக்கத்தை அகற்றி அவர்களை ஆட்கொண்டார்.

இதற்குப்பின் அந்த நடனம் பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்னும் இருபக்தர்கள் கண்டு களிப்பதற்காக தில்லையம்பலத்தில் நிகழ்ந்தது.

முனி குமாரன் ஒருவர் தில்லையில் ஈசனைத் தொழ வேண்டும் என்று விரும்பி தில்லை வனத்துக்கு வந்து கடும் தவம் புரிந்தார் 'நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு, புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு, பூமாலை புனைந்தேத்தி புகழ்ந்து பாடி வந்த' முனி குமாரனுக்கு ஒரே ஒரு குறையிருந்தது. காலையில் தாம் பறிக்கும் பூக்களை வண்டுகள் எச்சிற் படுத்திவிடுகின்றனவே என்று கவலைப்பட்டார். வண்டுகள் மொய்ப்பதற்கு முன்பே மரத்தில் ஏறிப்பறித்து விடலாம் என்ருலோ பனியால் நனைந்த மரங்களில் கால் வழுக்குகிறது. அத்துடன் அதிகாலையில் கண்களும் சரியாகத் தெரியவில்லை. இறைவனை நினைந்து ஏங்கினர். அடியார்க்கெளியவனுன அம்பலவாணன் அவருடைய துயர்க் குரலைக் கேட்டு, நேரே பிரசன்னமாகி என்ன வேண்டும் என்று கேட்டார்.

முனி குமரன் சொன்னர்: 'அப்பனே! உன் திருவடியில் சாத்தும் பூக்களை வண்டுகள் எச்சிற் படுத்தி விடுகின்றன. தூய்மையான மலர்களைச் சூடவேண்டும் என்பதே எனது விருப்பம். ஆகையால் எனக்கு புலியின் கால்களும், அவற்றின் நுனியில் கூரிய நகங்களும் கண்களும் படைத்துத் தரவேண்டும்' என்று கெஞ்சினுல், சிவபெருமான் அப்படியே வரம் கொடுத்து, தைமாதத்தில் குரு வாரத்தோடு கூடிய பூச நட்சத்திரத்தில் நண்பகல் வேளையில் தமது திருநடனக்காட்சியையும் தில்லையில் காட்டுவதாகக் கூறினர்.

புலிக்கால் பெற்றமையால் வியாக்ரபாதர் என்னும் பெயர் அந்த முனிகுமாரனுக்கு கிடைத்தது

ஆயிரம்நாவுபடைத்தஆதிசேஷனுக்கும் இந்நடன தரிசனத்தைக் காண்பதற்காக ஆசை பிறந்து விட்டது. அந்த அற்புத நடனத்தின் கோலாகலத்தைப் பற்றி திருமால் சொன்னதைக் கேட்டு அதை எப்படியாவது காணவேண்டுமெனத் துணிந்து கைலையில் தவமிருந்தான். சிவபெருமான் பிரசன்னமாகி தில்லைக்கு வந்து காணுமாறு பணித்தார். அவ்விதமே மனித உருவெடுத்து தில்லைக்குவந்து வியாக்ரபாதருடன் சேர்ந்து கொண்டான் ஆதிசேஷன். அவனே பதஞ்சலி முனிவராவார்.

ஐயன் கொடுத்த வாக்குக்கிணங்க தைப்பூசத்தினத்தன்று தில்லைக்கு எழுந்தருளி இவர்கள் இருவருக்கும் தனது ஐந்தொழில் புரியும் நடனத்தை காட்டியருளினர்.

ஆதிசேஷனுகிய பதஞ்சலி முனிவர் நடனத்தைககண்டு களித்துக்கொண்டிருந்த போது அவருக்கு ஒரு சங்கடம் ஏற்பட்டுவிட்டது. நடனத்தின் எழிலில் கட்புலனையும் அதோடுஇழைந்துவந்த இசையில் செவிப்புலனையும் பதித்தல் மனதை ஒருவழிப் படுத்துவதற்கு இடையூருயிருந்தது. கண்ணும் செவியும் ஒன்றுசேர்ந்த கட்செவியுடன் கூடிய தமது பழைய பாம்புருபத்தை எடுத்துக் கொண்டு நடனத்தைபூரணமாக ரஸித்தார்.

வியாக்ரபாதரை புலிருபத்திலும் பதஞ்சலியை பாம்புருபத்திலும் இறைவன்திருக் கோயில்கள் எங்கும் காணலாம் வியாக்ரபாதரினுல் சிதம்பரத்துக்கு புலியூர் என்ற இன்னொரு பெயரும் சிதம்பரநாதனுக்கு புலியூரான் என்ற இன்னொருபெயரும் ஏற்பட்டன.

தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள சிவன்கோவில்கள் எல்லாவற்றிலும் இன்றுவெகு சிறப்பாகக் கொண்டாடப்படும்ஆர்த்ரா தரிசனத்தை கோடான கோடி மக்கள் கண்டு மகிழ்வார்கள்.

'மோனந்த மாமுனிவர்
மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே
தங்கியிடு-மானந்த
மொண்டருந்தி நின்ருடக்
காணுமருண் மூர்த்தி
கொண்டிரு யாய்க்
வம்பலத்தான் கூத்து'.

[வி. என். பி.]

# இலங்கைப் பல்கலைக் கழகம் யாழ்ப்பாணம்

# எங்கே, எப்படி அமையவேண்டும்?

'நன்கு கற்றறிந்த மக்களுக்கே உலகின் எதிர்காலம் சொந்தமாகு'மென இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் மக்களுக்கு வின்ஸ்டன் சர்ச்சில் கூறினர். கலிபோர்னியாவின் முன்னைநாள் ஜனதிபதியாகிய கிளாக்கேர் பல்கலைக்கழகத்தின் உபயோகங்கள் என்ற தமது நூலில், தேசிய வளர்ச்சிக்கு அறிவு எத்துணை முக்கியமென்பதை விளக்கினர். ஒரு நாடு அடைந்துள்ள உயர்வுக்கும் அதன் அறிவுவளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. நாடுகளின் முக்கியத்துவத்தை உயர்கல்விக்குச் செல்வோரின் தொகையின் அடிப்படையில் வரிசைப்படுத்தலாம். ஒரு நாட்டின் தரத்தை உயர்த்து

றும் குடியேற்ற காலத்தின் முக்கிய நகரமே இன்றும் அரசியல் பொருளாதாரத் துறைகளில் மட்டுமல்லாமல் உயர்கல்வியிலும் மேலோங்கி நிற்பது மிகவும் கவலைக்குரிய விஷயமாகும். 1968—1969 இலங்கையின் நான்கு பல்கலைக்கழகங்களுக்கும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த தொகையினரில் மூன்றிலொரு பங்கினர் மேற்கு மாகாணத்திலிருந்தும், ஐம்பதில்ஒரு பங்கினர் ம[illegible]ம் கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம் ஆகியவற்றிலிருந்தும் பிரவேசம் பெற்றனர். முன்பு பல்கலைக்கழகப் பிரவேசத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்த வடமாகாணம்

உருவாக்கியுள்ள தென்பதையும் அவர்சுட்டிக்காட்டினர். எனவே தத்துவஞானிகள், விஞ்ஞானிகள்கல்விமான்கள் ஆகியோரை உருவாக்கக் கூடியதாக யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் தோன்ற வேண்டுமென்ற அவாவுடன் சுவாமிகள் இருந்தார். அண்மையில் நிறுவப்பட்ட இருபல்கலைக்கழக குழுக்களும், யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் [illegible]மக்கப்படவேண்டுமென்ற கருத்தையே வெளியிட்டன.

வுள்ள இவ்வுலகில் சமூகவியற்கலைகள் முக்கிய இடத்தைப்பெறுகின்றன. வடபகுதியில், அரசியலறிஞர், பொருளியலறிஞர், சமூகவியலறிஞர், பயிற்றப்பட்ட வரலாற்று நிபுணர் ஆகியோர் குறைவாகவேகாணப்படுகின்றனர்' எனவே வடபகுதியில் ஒரு பலம்வாய்ந்த உள்ளூராட்சியை, கிராம அடிப்படையில் நிறுவுவதற்கேற்ற தத்துவஞானிகள் இல்லை. கூட்டுறவு இயக்கத்தின் தலைவர்கள் அதன்நோக்

### வடபகுதியில் ஒரு புதிய பல்கலைக் கழகம் அமைய வேண்டும் என்று

மக்களிடையே அறிவை வளர்ப்பதற்கு, புத்தகங்கள் சஞ்சிகைகள் வெளியிடுவது அவசியமாகின்றது. பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தைப்போன்று. அரசாங்க உதவியுடன் புத்தகங்கள் வெளியிடும் திட்டம் மிகவும் அவசியம். எழுதுதல், வாசித்தல் ஆகியன, தாய் மொழியுடனேயே நின்றுவிடக்கூடாது. சிங்களம், ஆங்கிலம் ஆகியமொழிகளை வாசிக்கவோ, எழுதவோ தெரியாவிடில், நாம் தேசிய சமுதாயத்திலும், உலக சமுதாயத்திலும் அங்கத்துவத்தை இழந்துவிடு

குணவர்த்தன கமிஷன் குறிப்பிட்டுள்ளது போல யாழ்ப்பா த்தில் நிர்மாணிக்கப்படும் பல்கலைக்கழகத்தை சார்ந்ததாக சில கல்லூரிகளும் இருக்கலாம். பிரதேசவாரியாக பல்கலைக்கழகம் அமைப்பதற்குத் திட்டமிடப்படல் வேண்டும் இவற்றுள் சில யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விவசாய, தொழில் நுட்ப கல்லூரிகளாக இருந்து காலப்போக்கில் வெவ்வேறு பல்கலைக்கழகங்களாகலாம். ரொபின்ஸ் பிரபு குறிப்பிட்டபிரகாரம் கனிஷ்ட கல்லூரிகள் அமைக்கப்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டின்மீது அந்நிய நாடு ஒன்று படையெடுத்தால் படையெடுப்பிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவது தான் இராணுவத்தின் முக்கிய கடமை. உள்நாட்டில் பெரும் குழப்பமேற்பட்டால் அதைச் ச ாளிக்கப் பொலிசாரால் முடியாவிட்டால் பொலிசுக்குஉதவியாக இராணுவம் அழைக்கப்படுவதுண்டு இதுவும் இராணுவத்தின் கடமைகளில் ஒன்று. அவசரகால நிலையில் அத்தியாவசிய சேவைகளை இராணுவத்திடம் ஒப்படைப்பதுண்டு இதுவும் இராணுவத்தின் சேவைகளில் ஒன்றுதான்.

இந்தக் கடமைகளை அடிப்படையாகக் கொண்டுதான் இராணுவத்தினருக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. நமது நாட்டைப் பொறுத்தவரையில் அந்நிய படையெடுப்பு சமீப காலத்தில் ஏற்பட்டதில்லை; இனி ஏற்படும் வாய்ப்பிருப்பதாகவும் எதிர் பார்ப்பதற்கில்லை. அதிர்ஷ்டவசமாக உள் நாட்டிலும் பெரும் குழப்பங்கள் அடிக்கடி ஏற்படுவதில்லை, அந்நியரின் ஆதிக்கக் காலத்தில் இராணுவத்தினர் எப்படிப் பணிகளில் உபயோகிக்கப்பட்டுள்ளனராம். இராணுவத்தினருக்கு இது தகுந்த பொருத்தமான வேலையல்லவென்பதை கடந்தகாலச் சம்பவங்கள் உணர்த்துகின்றன. இதற்காக அவர்கள் மீது குறைசொல்ல இடமில்லை; அவர்கள் பெற்றபயிற்சி அது.

எனவே இராணுவத்தின் பயிற்சி முறையை மாற்றி நாட்டு மக்களுடன் அவர்கள் நட்புறவு பூணவும் நாட்டுமக்களின் ஒத்துழைப்புடன் சட்ட விரோதக் குடியேற்றத்தையும் கள்ளக் கடத்தலையும் தடுக்கவும்கூடிய தேசிய சேனையாக அதை அமைக்கவும் முன்வரவேண்டும். அதுவரை இந்த இராணுவமுகாம்களை அப்பகுதிகளிலிருந்து அகற்றிவிட்டு சட்டவிரோதக் குடியேற்றம் கள்ளக் கடத்தல் ஆகியவற்றைத் தடுக்கும் பொறுப்பை பொலிசாரிடமும் சுங்கப் பகுதியினரிடமும் முழுக்க முழுக்க ஒப்படைப்பதே மேல். இதனால் மக்களுக்கும், அரசாங்கத்துக்கும், இராணுவத்தினருக்கும் கூட நிம்மதி. பிரதமர் இதுபற்றி ஆலோசிக்க வேண்டும்.

---

## வரப்பெற்றோம்

# உலகின் ஒளி - 1969

'உலகின் ஒளி' இவ்வாண்டு (நத்தார்) மலர் வரப்பெற்றோம். கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைந்திருக்கும் இம்மலர் எங்கு கிடைக்குமென்றோ யாரால் வெளியிடப்பட்டதென்றோ எவ்வித விபரமும் இம்மலரில் ஏனோ தெரிவிக்கப்படவில்லை. விலையும் குறிப்பிடப்படவில்லை. நல்ல தாளில் அதிக பக்கங்களைக் கொண்டு மலர் வெளியாகியுள்ளது. இம்மலர் 'அன்னையர் அனைவருக்கும் அர்ப்பணம்' எனக் குறிப்பிட்டிருப்பது புதுமையாயும் உருக்கமாயும் உள்ளது. தனக்குப் பதிலாகவே இறைவன் உலகில் தாயைப் படைத்தான் என யாரோ எழுதியது நினைவு வருகின்றது.

மலரில் இடம்பெற்றுள்ள 'கர்நாடக சங்கீதமும் திருவழிபாடும்', 'கலையும் நிலையும்', 'குற்றத்தைத் தடுப்பதில் மதக் கல்வியின் முக்கியத்துவம்' போன்ற கட்டுரைகள் புதுமையான-பயனுள்ளவையாகும். மற்றும் கருத்து மிக்க பல கட்டுரைகளும், கருவுள்ள சிறு கதைகளும், நயமிக்க கவிதைகளும் மலரில் இடம்பெற்றுள்ளன. 'வார்த்தையின் படிவம்' உரைச் சித்திரம் கருத்துமிக்க ஒரு படைப்பாகும். அட்டைப் படமும் மலரினுள்ளே காணப்படும் இதர படங்களும் மலருக்குக் கவர்ச்சி தருகின்றன.

வனிதையருக்கும், சிறுவருக்கும் விசேஷ விருந்து, மலரில் அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. புனித சந்தியோகுமையோர் ஆலய அனுபந்தமும், 'லைற் ஒவ் த வேர்ல்ட்' ஆங்கில அனுபந்தமும் மலரில் இடம்பெற்றுள்ளன. ஆங்கில அனுபந்தத்தில் பல தரமிக்க கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஆலய அனுபந்தத்தில் புனித சந்தியோகுமையோர் கோவில் உட்புற, வெளிப்புறப் படங்கள் உட்படக் கோவில் பற்றிய பல விபரங்களும் அடங்கியுள்ளன.

கத்தோலிக்க மக்கள் ஒவ்வொருவரும் மற்றும் தெய்வ நம்பிக்கையும் இலக்கியப் பற்றும், சமூக நல அக்கறையும்கொண்ட எல்லாருமே படிக்கவேண்டிய மலர், 'உலகின் ஒளி'.

தொகுப்பாசிரியர் அருட்டிரு பெனெற் கொன்ஸ்ரன்ரைன் அடிகளையும், ஆசிரியர் திரு. கு. இராயப்புவையும் எவ்வளவு பாராட்டலாம்.

'சபா'

---

...புண்டு. நாடுகளின் முக்கியத்துவத்தை உயர்கல்விக்குச் செல்வோரின் தொகையின் அடிப்படையில் வரிசைப்படுத்தலாம். ஒரு நாட்டின் தரத்தை உயர்த்துவதில் பல்கலைக்கழகம் மட்டுமல்லாது ஆராய்ச்சி நிலையங்கள், கற்றறிந்தோர் குழுக்கள் கலாச்சார நிலையங்கள், பொதுசன நூல்நிலையங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் வெளியீடு முதலியன முக்கிய பங்கு வகிக்கின்றன. முன்னெரு போதும் கண்டிராத விஞ்ஞான வளர்ச்சி, சமூக மாற்றங்கள் முதலியன மலிந்துள்ள தற்போதைய உலகில் பல்கலைக்கழகங்கள், மற்றும் மேற்கூறிய கல்விநிலையங்கள் இன்றியமையாதனவாகும். கடந்த இருபத்தி ஐயாயிரம் ஆண்டுகளிலும் பார்க்க அடுத்த 25 ஆண்டுகளில் மனிதனின் சிந்தனையில்மாற்றமேற்படுவதவசியமாகும்.

எனவே அறிவு வளர்ச்சிக்கான கருவூலங்கள் ஒரு நாட்டில் இல்லையாயின் அந்நாடு தனது எதிர்காலத்தை இழந்துவிடும். குறைவிருத்தி நாடுகள் பலவற்றில் பல்கலைக்கழகங்கள் இருப்பினும் விருத்தியடைந்த உலகின் மட்டத்தை இவை அடையவில்லை. இதுமட்டுமல்லாமல் இந்நாடுகளில் அறிவு வளர்ச்சியை ஆதரிக்கும் கலாச்சாரபீடங்களுமில்லை. உயர் கல்வித்துறையை தாமதித்து ஆரம்பித்ததன் விளைவுகளினால் இலங்கை இன்னமும் பாதிக்கப்படுகின்றது. மிகவும் தாழ்ந்த சமூக— கலாச்சார சூழ்நிலையிலுள்ள இலங்கையில் பல்கலைக்கழகங்கள் இருந்தாலும் அறிவு வளர்ச்சியை தூண்டும் ஏனைய நிலையங்கள் இல்லாமையும், நவீன புத்தகங்கள் சஞ்சிகைகள் பிரசுரிக்கப்படாமையும் வாசிக்கப்படாமையும் அவற்றை விநியோகம் செய்யும் வாசிகசாலைகள் அதிகம் இல்லாமையும் இப்பல்கலைக்கழகங்களிலிருந்து முழு நன்மையையும் பெற முடியாது தவிர்க்கின்றன. இத்தகைய சமுதாயத்தில் யுனெஸ்கோ விளக்கப்படி ஒரு சராசரி மனிதன் ஒரு வருடத்தில் 2000 பக்கங்கள் வாசிக்கும் உயர்ந்த நிலையை ஒருபோதும் அடையமுடியாது.

### இப்போது ஆறும் இடம்தான்

நாம் சுதந்திரமடைந்து 21 ஆண்டுகட்குப் பின்ன வடமத்திய மாகாணம் ஆகியவற்றிலிருந்தும் பிரவேசம் பெற்றனர். முன்பு பல்கலைக்கழகப் பிரவேசத்தில் இரண்டாம் இடத்தை பெற்றிருந்த வடமாகாணம் தற்போது ஆறும் இடத்திற்கு வீழ்ச்சியடைந்துவிட்டது. இப்பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானப் பகுதி பிரவேசங்களைப் பொறுத்தவரை மேற்குமாகாணம் 44 வீதம், வடமாகாணம் 26 வீதமும், எஞ்சியுள்ள 30 வீதம் ஏனைய மாகாணங்களாகவும் காணப்படுகின்றன.

கிராமங்கள் அழிந்தால் ஒரு நாட்டின் பெருமை பாதிக்கப்படுமென்ற ராதாகிருஷ்ணனின் கருத்தை மனதிற் கொள்ள வேண்டும். இவ்வறிக்கை கிராமப்புறங்களில் பல்கலைக்கழகம் அமைப்பதை தீவிரமாக வேண்டி நிற்கிறது. இதற்கேற்றவாறு கொத்தாரிக் குழுவினரின் அறிக்கையிலும் கல்வித்திட்டமிடுதலும் அபிவிருத்தியும் மாவட்ட ரீதியாக மேற்கொள்ளப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மாவட்டங்களுக்கிடையிலுள்ள கல்வி, கலாச்சாரம் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை ஒரளவுக்குக் குறைக்கும். மாவட்டரீதியில் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டாற்ருன் நாட்டின் அறிவு வளர்ச்சி பெருகவும் வாய்ப்புண்டாகும். 1823ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட வட்டுக்கோட்டை செமினரி, தமிழ்மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதென்பது கண்கூடு. இச்செமினரிஇல்லாமலிருந்திருந்தால் சி. வை. தாமோதரம் பிள்ளை மற்றும் அவர் காலத்து கல்விமான்கள், சீர்திருத்தவாதிகள் தோன்றியிருக்க முடியாதிருந்திருக்கலாம்.

### விபுலானந்த அடிகள் முன்பே கூறினர்

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகமொன்று நிறுவப்பட வேண்டுமென நாற்பது வருடங்களுக்கு முன்பே சுவாமி விபுலானந்தர் வேண்டுகோள் விடுத்தார். சனத்தொகைச் செறிவும் மாணவரும், கல்வி பயிலும் மரபும், அதிகமாகக் காணப்படும் எந்த இடமும் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு சிறந்த இடமென அவர்குறிப்பிட்டார். உலகப் புகழ் வாய்ந்த கல்விமான்களை எவ்வாறு யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை — செமினரி நில பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டுமென்ற கருத்தையே வெளியிட்டன.

கேற்ற தத்துவஞானிகள் இல்லை. கூட்டுறவு இயக்கத்தின் தலைவர்கள் அதன்நோக்

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம்24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

## வடபகுதியில் ஒரு புதிய பல்கலைக் கழகம் அமைய வேண்டும் என்று கூறும் கட்டுரையாளர் எந்த இடத்தில் எப்படிப்பட்ட முறையில் அது அமைய வேண்டுமென்பதை தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டுகிறார்.

### நல்ல இடம் நல்லூர்

நல்லூரில், தமிழ் அரசரின் அரண்மனை இருந்த இடமாகிய சங்கிலித்தோப்பு பல்கலைக்கழகம் அமைப்பதற்கு உகந்த இடமாகலாம். தமிழ் அரசர்கள், கோயில்கள், தமிழ்சங்கம், ஆஸ்தானகவி, அரசகேசரி ஆகியோரின்பழமை நினைவுகளை நல்லூரில் இவ்விடம் கொண்டுள்ளது. இத்துடன், பல்கலைக் கழக நிர்மான சூழ்நிலைபற்றிய நவீன கருத்துக்கு ஒப்ப இவ்விடம் ஜனத்தொகை நிரம்பிய நகரத்தின் ஒரத்திலேயே இருக்கின்றது.

எங்கு நிறுவப்பட்டாலும், அங்குள்ள ஆசிரியர் மாணக்கர் முதலியோர், சர்வதேச மதிப்பை பெறக்கூடியவகையில்அமையவேண்டும், நவீன ஐரோப்பாவில் உள்ளதைப் போல, பல்கலைக் கழகம், கங்களை சமுதாய மறுமலர்ச்சியை தூண்டும் வண்ணம் அமைக்கமுடியுமா? இதுமட்டுமல்லாமல் வடபகுதியில் அபிவிருத்தித் திட்டத்தையும், அதற்கேற்ப கல்வித் திட்டத்தையும் உருவாக்கக் கூடிய அறிஞர் இருக்கிறார்களா? வரலாற்றறிஞனுக்கும் மாணவனுக்கும் தேசிய உணர்ச்சியை தூண்டும் வகையிலமைந்துள்ள பிரித்தானிய வரலாற்றைபோன்று. இலங்கைவரலாறும் தொகுக்கப்பட்டுள்ளதா? தென்கிழக்காசியாவில் இந்தியாவின் குடியேற்ற, கலாச்சார விரிவையும், தமிழ் கலாச்சார பரவலையும் சரித்திரமென நாம் படிப்பது மிகவும் பொருந்தும். இத்தகைய கல்வி, ஆனந்தகுமாரசுவாமி போன்று, சமயம் மொழி கலாச்சாரம் ஆகியவற்றிற்கு தொண்டுசெய்யத்தூண்டும். பட்டதாரிகளை மேலும்

---

## — திரு. கு. நேசையா —

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர் இலங்கைப் பல்கலைக்கழகம் - பேராதனை)

விஞ்ஞானம், வர்த்தகம், தாய்மொழியில் இலக்கியம் முதலியவற்றை வளர்க்க வேண்டுமென, இந்நூற்ருண்டின் முற்பகுதியில் பல்கலைக்கழகஇயக்கத்தின் பிதாவாகிய பொன். அருணுசலம் வேண்டுகோள் விடுத்தார். விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் வளர்ச்சியுடன் ஓர் உலக சமுதாயமே தோன்றும் கட்டத்திலிருக்கும்போது, பல்கலைக்கழகம் இதற்கேற்ப அமையவேண்டும் வெளிநாட்டிலாயினும் சரி உள்நாட்டிலாயினும்சரி, பல்கலைக்கழகம், சமூகத்திற்கு ஆற்றும்தொண்டு, மனிதப்பிரச்னைகளைகற்றறிந்தோர்கையில் விடுவதேயாகும் என எறிக்ஆஸ்பி குறிப்பிட்டுள்ளார்.

### அறிவுவளர்ச்சிக்கு தொண்டு

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் பல்கலைக் கழகம், வடபகுதியின் அறிவு வளர்ச்சிக்கு பெருமளவு தொண்டாற்றமுடியும். கற்பனைக் கூறுகளைவிட புள்ளிவிபர உண்மைகளே தேவையாக பயிற்றுவித்தல், மற்றும் ஆராய்ச்சி, கல்வியூட்டல், பொதுநல சேவையில் பங்குபற்றல் ஆகிய அறிவுவளர்ச்சியின் மூன்று அங்கங்களை கடைப்பிடிக்காவிடில், ஒரு பல்கலைக் கழகம் தனது தன்மையை இழந்துவிடும்.

முதியோர் கல்வியறிவைப் பெருக்குவதே, குறைவிருத்தி நாடுகளில் பல்கலைக் கழகங்களின் தலையாய கடமையாகும். கொத்தரிகமிஷன் அடிக்கைஇந்தியாவில்இதனை வலியுறுத்தியுள்ளது. நாளுக்கு நாள் மாறிவரும் இவ்வுலகில் தொடர்ச்சியான கல்வியறிவையும், தனது பழைய மாணவருக்கு பயிற்சியும் அளிப்பது, பல்கலைக் கழகத்தின் கடமையாகும் இலங்கையில், மிகவும் குறைந்தவயதிலேயே பள்ளிக்கூடங்களிலிருந்து வெளியேறும் பெருந்தொகையான மாணவர்களுக்கு கல்விகற்கும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படவேண்டும், இதுமட்டுமல்லாமல், நடுத்தர தலைவரை பயிற்றுவிப்பதற்கும் உயர்கல்வி மிகவும் அவசியமாகின்றது.

ளம், ஆங்கிலம் ஆகியமொழிகளை வாசிக்கவோ, எழுதவோ தெரியாவிடில், நாம் தேசிய சமுதாயத்திலும், உலக சமுதாயத்திலும் அங்கத்துவத்தை இழந்துவிடுவோம். பல்கலைக் கழக அச்சகம், ஜனநாயக ரீதியில் அறிவை வளர்ப்பதற்குபெருமளவு உதவும்.

பல்கலைக் கழக ரீதியில் சர்வோதய இளைஞர் சமாதானப்படைகளை உருவாக்குவதன் மூலம் சாதாரண மக்களுக்கும், கற்றறிந்தோர்க்குமிடையில்நெருங்கிய தொடர்பை உருவாக்கமுடியும்.

### ஆசிரியர்-மாணவர் உறவு

ஒரு நல்ல உண்மையுள்ள சமுதாயம் உருவாகுவதற்கு பெருஞ்செலவில் மாணவர் விடுதிகள் அமைக்கவேண்டியதில்லை. மாணவர்கள் தமது சுயமுயற்சியினால், கூட்டுறவு முறையில் நடாத்தும் விடுதிகள் ஒரு நல்ல மாணவ சமுதாயத்தை உருவாக்கும். மிகப்பழைய காலத்து குரு-சிஷ்ய முறைக்கு ஒத்த, ஆசிரிய மாணவ உறவுமிகவும்அவசியமாகும். இந்த அடிப்படையிலேயே வடபகுதியில் ஒரு பல்கலைக் கழகம் அமையவேண்டும்.

குறைவிருத்தி நாடுகளின் பல்கலைக் கழகங்களின் முக்கியபணி பாடசாலை கல்வி முறையை சீர்திருத்துவதாகும். இங்கிலாந்தில் ஜீன் பிளாட், வலியுறுத்தியுள்ளதுபோல, ஆசிரியர்கட்கு கல்வியறிவூட்டுவதிலும், பயிற்றுவிப்பதிலும், பல்கலைக் கழகங்கள முக்கியகவனம் செலுத்தவேண்டும்.

பாடத்திட்டங்கள், மற்றும் கல்வி விதிகள் முதலியவற்றை கல்வித்திணைக்களம் வரையறுத்லை விடுத்து, பல்கலைக்கழக ஆதிக்கத்தின் கீழ் கடமையாற்றும், சுதந்திரமான, பரீட்சைக்குழுக்கள் அமைப்பது அவசியமாகின்றது மூன்று லட்சம் மாணவர்களை கொழும்பிலுள்ள திணைக்களம் மூலம் பரிசோதியாது இங்கிலாந்திலுள்ளது போல் பிரதேசவாரியாக பள்ளிப்பரீட்சைகளை நடத்துதல் நலம்

நீட்காம், குணவர்தன கமிஷன்கள் பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டன ஆனல் உண்மையில் பேராதனை, கொழும்பு வித்யோதய, வித்யாலங்கார பல்கலைக் கழகங்கள் மட்டுமே நிறுவப்பட்டுள்ளன.

நாம் வேண்டுவது 'இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்' ஆகும்.

நுட்ப கல்லூரிகளாக இருந்து காலப்போக்கில் வெவ்வேறு பல்கலைக்கழகங்களாகலாம். ரொபின்ஸ் பிரபு குறிப்பிட்டபிரகாரம் கனிஷ்ட கல்லூரிகள் அமைக்கப்படுமாயின் அவை 'பல்கலைக்கழகங்களைச் சார்ந்தனவாக அமைக்கப்படல் வேண்டும்'

இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், ஆட்சிமன்றத்தில் இயற்றப்படும் சட்ட மூலம் நிர்மாணிக்கப்படவேண்டும்: உயர்கல்வி நிலையங்களின் ஸ்தாபிப்பு, நாட்டின் சம்மதத்தில் தங்கியிருப்பது சாலச்சிறந்தது

### ஒரு சங்கம் அமைக்கலாம்

அறுபத்து நான்கு ஆண்டுகளுக்குமுன், 1906-ம் ஆண்டு தை மாதம் 19-ம் திகதி கொழும்பில் நடந்த இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கக் கூட்டத்தில் சேர் பொன் அருணுசலம் பின் வருமாறு குறிப்பிட்டார்

'நாம் இன்று ஆரம்பித்து வைக்கும் இயக்கம் எமது நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் அவசியமாகும்'

'இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், அமைப்பதற்கும் ஒருசங்கம் அமைத்தல்நன்று. இச்சங்கம் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டிய அவசியத்தை, தமிழ்மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் வலியுறுத்த வேண்டும். இம்மாபெரும் செயல், பல்வேறு நாடுகளிலும்சிதறியிருக்கும்தமிழ் கல்விமான்களையும், விஞ்ஞானிகளையும் பெருமளவு கவரக்கூடும். இவர்களுள் சிலர் தமது தாய்நாட்டிற்குத் திரும்பி, வடபகுதிக்குமட்டுமல்லாது தாய்நாடு முழுவதற்குமே பயனளிக்கும்வகையில் உழைக்கமுன்வரக்கூடும்.

---

## தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்களாம்

மல்லாவி, ஞாயிறு

''தமிழினத்தின் விடுதலைப் போராட்டங்களில் தமிழரசுக்கட்சி நடந்துகொள்ளும் நேர்மையான வழிகள் தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டது. இதனால் தான் தமிழ் மக்கள் தமிழரசுக்கட்சியை ஆதரிக்கின்றனர்'' என மல்லாவியில் நடைபெற்ற இளைஞர்கூட்டத்தில் பேசும்போது கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிட்ட திரு. மு. ஆலாலசுந்தரம் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org